
முதுகுளத்தூர் கலவரம்



'பாம்' கையிலே யிருக்கு என்றார்
பாம்புல்ல கையிலே யிருக்கு ?
விலாங்கு பிடிக்க நெனைச்சோம்
விலங்கு தரிக்க லாச்சே ?

தினகரன்
பிரசுரம்

முதுகுளத்தூர் கலவரம்

தினகரன் பத்திரிகை ஆசிரியரும்
பன்னூல் ஆசிரியருமான
தினகரன் எழுதியது

தினகரன் நூலகம்,
80, மேல ஆவணிமூல வீதி,
மதுரை.

முதற் பதிப்பு ... ஜனவரி 1958

கலகத்திற் பலியான
இம்மானுவேலுக்கும்
எல்லாருக்கும்
இந்நூல் உரியது.

 [இதன் விலை அணு 8

அறிமுகம்

'பாயிர மல்லது பனுவலன்றே' என்னும் இலக்கணம் இந் நூலைக் கட்டுப்படுத்தாது. எல்லா விஷயங்களிலும் முதுகுளத்தூர் தொகுதியே ஒரு விதிவிலக்கு. பூக்கடைக்கும், சாக்கடைக்கும் விளம்பரம் ஏதுக்கு? உலகம் முழுதும் வீசும் வீச்சம் ஒன்றுபோதாதா அது என்ன எவ்விடம் என்று சொல்ல?

காரக்கைத் திறந்தால்தான் அத்தரின் வாசம் மூக்குக்கு வரும். எதையுந் திறக்காமலே இதன் வீச்சம் மண்டையி லேறும்.

தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சியா யிருக்கும்; சமீபத்திற் போய்ப் பார்த்தால் எரிச்சலா யிருக்கும். நான் முதுகுளத்தூர் விஷயத்தைக் கிட்ட இருந்து பார்க்கிறேன், மற்றவர்கள் எட்ட இருந்து பார்க்கிறார்கள்; என்னென்னமோ சொல்லுகிறார்கள். நான் என்ன சொல்லுவேன் என்று நீங்கள் புத்தகத்தை விலைகொடுத்து வாங்குவதன்முன்னமேயே நினைத்திருப்பீர்கள். அது அநேகமாய் அப்படியே யிருக்கும். ஆனால் எவ்விதம் சொல்லுகிறேன் என்பதை நிச்சயமாய் உங்களால் நினைக்கவே முடியாது. அது ஒன்றே மற்றவர்கள் இவ்விஷயத்தில் தலையிடுவதற்கும் நான் தலையிடுவதற்கும் உள்ள வித்தியாசம்.

என் தாளை எல்லாருக்குந் தெரியும்; இந்த ஆளை அநேகருக்குத் தெரியாது. கணவனுக்கும் மனைவிக்கும் ஊடே ஒருவருக்கொருவர் புரியாத சில விஷயங்களைத் தெரிவிக்கவருங் குழந்தையைப்போல, இந்நூல் என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்துமென்று நம்புகிறேன். தாளின் பெயரும் ஆளின் பெயரும் ஒன்றாயிருப்பதே ஒரு விந்தை. என் பெயரும் **தினகரன்**; என் பத்திரிகையின் பெயரும் தினகரன். புனை பெயரல்ல, உண்மைப்பெயர். இப் புதுமுறையை இதுவரை எவரும் கையாளவில்லை. ஆளையுந் தாளையும் பிரித்துச் சொல்லுவது ஆரம்பத்திற் சிறிது குழப்பமா யிருந்தாலும் பழகப் பழகச் சரியாய்ப் போய்விடும்.

வணக்கம்.

10—1—'58
மதுரை.

தினகரன்.

அட்டைப்படம்

பார்த்ததும் அட்டைப்படம் உள்ளத்தைக் கிள்ளும். ஏதோ ஒரு குட்டை. குட்டையும் நெட்டையுமான தலைவர்கள் அதைக் கலக்குகிறார்கள். ஆகையால் அது நிச்சயமாய் அரசியல் குட்டையாகவே இருக்கும். எதற்குந் துணிந்தவரான தேவர், தீவிரமாய்க் குழப்பி மீன் பிடிக்கப்பார்கிறார். பாம்பே அகப்படுகிறது. அதிர்ச்சியில் அவர் கையிலிருந்த கமண்டலத்தைத் தவறி கீழே போட்டுவிடுகிறார். அது அப்பாவியான சசிவர்ணத்தின் தலையில் விழுகிறது. அண்ணா, ம.பொ.சி., ராமமூர்த்தி, வெங்கிட்டகிருஷ்ண ரெட்டியார் போன்றவர்களுக்கு மீனும் கிடைக்கயில்லை; அடியுங்கிடைக்கவில்லை இன்னும் குட்டையைக் குழப்பிக்கொண்டேயிருக்கிறார்கள்.

படித்ததும் கீழே உள்ள குறிப்பை, நினைவு கட்டவிழ்த்துகொண்டு ஓடுகிறது. எங்கே ஓடுகிறது? பசும்பொன்னுக்கும் காஞ்சீபுரத்துக்குமா ஓடும்? நேபாளத்துக்கும், திபேத்துக்கும், கொரியாவுக்கும் இறக்கைகட்டிப் பறக்கிறது. பாமா, பாம்பா என்று திகைக்கவைக்கிறது.-'பாம்' வெடிக்கும்; பாம்பு கடிக்கும். இரண்டுங் கொல்லும்.

பிடித்ததும் மீன்களிலே மிகப்பெரியது விலாங்கு, அது மீனுக்குத் தலையும், பாம்புக்கு வாலுமாயுள்ளது. பதவிகளிலே உயர்ந்தது மந்திரி. அதைப்பிடிக்க அடாது செய்தார் தேவர்; படாது படுகிறார். அரசாங்கம் அவரைப்பிடித்துச் சிறையில் அடைத்திருக்கிறது.

சிந்தித்ததும் கவிக்குப் புதுப்புது கருத்துக்கள் உதிப்பதுபோலப் பார்க்கப் பார்க்கப் படத்திற்குப் பலப் பல அர்த்தங்கள் புரியும்.

தினகரன்.

ஓம் :

தினகரன் பிரசுரம்..

★

முதுகுளத்தூர் கலவரம்

(ஆசிரியர் தினகரன் எழுதியது)

" சுற்றுமுற்றும் பாரெலாம் சூறையான ஊர்களும்
பெற்றதாய்கள் ஓலமும் பேய்புகுந்த கோலமும்,
இற்றழிந்த தேசமும் இவைகளோ நும் வெற்றிகாண்!
— நாமக்கல் கவிஞர்.

முதுகுளத்தூர் கலகம் எவ்வளவு பொல்லாத விஷயம்! இந்தியாவில் எங்கோ ஒரு மூலையில் எப்படியோ நடந்த கலகம் அமெரிக்காவரை எட்டிவிட்டதே? அமெரிக்கப் பத்திரிகைகளும் அதைப்பற்றி அனுதாபமும் அபிப்பிராயமுந் தெரிவித்தன.

காங்கிரஸ் கட்சியின் கீர்த்தியைக் கெடுக்க, சென்னை சர்க்காரின் திறமையைப் பழிக்க, தமிழ் மக்களின் மானத்தைப் பறிக்க வந்த, இந்தச் சம்பவங்கள் பற்றி, அழுகாத தலைவனுமில்லை; எழுதாத பத்திரிகையு மில்லை. ஆனால் உண்மையாக அழுத ஒரு தலைவனும், நேர்மையாக எழுதிய ஒருதாளும் இல்லை. வம்புக்கு மாரடித்த அப்பத்திரிகைகளுக்கும், துன்புக்குக்கண்ணீர் வடித்த அத் தலைவர்களுக்கும் அரசாங்கத்தினிடம் அத்தனை கோபம். அதனாலேதான் அவைகள் அப்படி எழுதித்தீர்த்தன; அவர்கள் அப்படி அழுது தீர்த்தனர், சம்பந்தப்பட்ட ஜாதித்

தலைவர்களைவிட, சம்பந்தப்படாத சர்வகட்சித் தலைவர்கள்தான் ரெம்பக் கண்ணீர் வடித்தனர். ஆனால் அக் கண்ணீரில் சூடு என்பதே இல்லை.

பொய்யாகச் சிரிப்பது ஒருகால் எளிதாக இருக்கலாம். ஆனால் பொய்யாக அழுவது அவ்வளவு எளிதானதல்ல. தாயினிடம் ஏதாவது கேட்டு அழுங்குழந்தை, தன் இதழ்க் கோடியில் நெளிந்து நழுவுஞ் சிரிப்பை அடக்க முடிந்தாலும், பாதையில் விழுந்தவன், பார்த்தவர்கள் நகைப்பார்களே என்பதற்காகச்சிரிக்கும்போது, கண்ணிலிருந்து ஒழுகும் வேதனை நீரை அவனால் தடுத்து நிறுத்த முடியவில்லை·யல்லவா ?

அப்பப்பா ! இவன் எவ்வளவு பொல்லாதவன் ! பொய்யை மெய்யாகக் கூறுவதில் மனிதனுக்கு மிஞ்சின மிருகம் எது இருக்கிறது ? பொய் மூட்டையைச் சுமந்து சுமந்து இவன் தலையே பொட்டலாகிவிடவில்லையா ?

மணல் மூட்டைகளை அடுக்கி அதன்மீது இரயிலையே ஓட்டுகிறார்கள் மெதுவாக. பொய் மூட்டைகளை அடுக்கி அதன்மீது சிலர் வண்டியை ஓட்டுகிறார்கள் வேகமாக. அவசர நிமித்தம் அவர்கள் அப்படி நிதானமாய்ச் செய்கிறார்கள். ஆத்திர நிமித்தம் இவர்கள் இப்படி நினைவிழந்து செய்கிறார்கள். அவசரத்திற்கும் ஆத்திரத்திற்கும் எத்தனை வித்தியாசம் ? இடையில் என்ன எல்லாம் நடந்து விடுகின்றன?அவசரத்திற்கும் அவசியத்திற்கும் ஊடே எவ்வளவு ஊடல் ? விவாகரத்துவரை போய் முடிந்துவிடுகிறதல்லவா ?

"இன்றைய தலைவர்கள் என்ற மதிப்பிற்குரியவர்கள் எல்லாரும் உண்மையான தெய்வபக்தர்கள் அல்ல; நைவேத்தியம் பெறுவதற்காகக் கல்லின் முன்னாற் கைகூப்பும் பூசாரிகள்" என்கிறார் ஓர் நாவலாசிரியர். இது மெய்யோ பொய்யோ எனக்குத் தெரியாது, ஆனால் கல் என்று அவர் ஜனங்களையும், நைவேத்தியம் என்று ஓட்டுகளையும் குறிப்பிடுகிறார் என்று எனக்குத் தோன்றுகின்றது.

பாழாய்ப்போன முதுகுளத்தூர் பகுதி, இடிந்து விழுந்த பழங்காலத்துக் கோயிலைப்போலிருக்கிறது. அமைதியாக எரியும் ஒரு அகல் விளக்குக்கூட அதில் இல்லை. பழமையான பக்தியு மில்லை; புதுமையான சக்தியுமில்லை. இரண்டுக்கும் இடையில் மிருகபலம் கொலை வெறியில் தன் பாட்டுக்கு வேட்டையாடி விட்டது.

முதுகுளத்தூர் கலகத்தில் எவரெவர்பாகம் எவ்வளவு எவ்வளவு இருந்தாலும், உ, முத்துராமலிங்கத்தேவர் பாகமே முழுக்க முழுக்க இருந்தது. அதில் அவர் வேஷம் ரொம்ப அசிங் கமா யிருந்தது. கொலை வெறியில் அவர் கூத்தாடி விட்டார். இந்நூல். இங்கே இது நடந்தது, அங்கே அது நடந்தது என்று சொல்லாது. அதை அன்றுட அங்காடிப்பத்திரிகைகள் சொல்லித் தீர்த்துவிட்டன. கலகத்துக்கு மூலகாரணம் என்ன? முடிவு எது? இவைகளே இதில் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஒரு நூலை அதன் ஆசிரியர் என்ன விதத்தில் எழுதுகிருர் என்பதுதான் முதலாவதாக அறியவேண்டிய விஷயம் "எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்கிருர் வான்புகழ் கொண்ட வள்ளுவர்.

உதடசைந்தால் உயிர் போய்விடுமே என்று உலகமே பயந்தபோது, உண்மையைச்சொன்னுல் ஒன்றுமே வராது என்று உணர்த்திய 'தினகரன்' இதைப் பற்றி என்ன சொல்லுகிருர் என்றறிய எல்லோரும் எவ்வளவோ ஆவலோடிருக்கிருர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் நான் என்னுடைய 'தினகரன் பத்திரிகையில்' பல மாதங்கள் முன்பே இது பற்றி எழுதியிருக்கிறேன். உள்ளுக்குள்ளே கனன்றுகொண்டிருக்கும் நெருப்புத் திடீரென்று பற்றிப் பிடிக்கும் என்றும் எச்சரித்திருக்கி றேன். அப்படி யாரும் அதை உச்சரித்ததில்லை. முதுகுளத்தூர் பூகோளத்தின் எந்தப் பகுதியில் இருக்கிற தென்றே தெரியாத வர்களும், முத்துராமலிங்கத்தேவர் பூச்சையும் பேச்சையுமட்டுமே தெரிந்தவர்களும் இதைப்பற்றி எழுதுவது பல குருடர்கள் ஒன்று

சேர்ந்து ஒரு யானையைக் கையால்தடவி பார்த்துச்சொல்லுவதை யொக்கும். கண் தெரிந்தவன் கண்டு சொல்லுவதுபோலிரா தல்லவா ?

கலகத்திற்கு வித்திட்ட வகுப்பிலும், நிலத்திலும் உதித்த வன் நான் என்பது வெட்கப்படவேண்டிய விஷயந்தான். இருந் தாலும் வலிக்குமே என்று அறுத்து ஆற்ருவிட்டால் புரையோடி விட்ட புண்ணும், கசக்குமே என்று மருந்து சாப்பிடாவிட்டால் நாட்பட்ட நோயும் தீருவதெப்படி?

வீரம் என்பது மறவர்களின் பிறவிச்செல்வந்தான். அதை யாரும் மறுக்கவில்லை; மறக்கவுமில்லை. ஆனல் அவ்வீரம் அக்கிர மம் புரிவதிலா இருக்கிறது? அக்கிரமத்தைக் கடிவதிலேயே இருக் கிறது. நல்ல வழியிலே நம் வீரத்தைக் காட்டி, மானத்தைக் கட்டிக் காத்தால் நமது பெருமை, பூமியெங்கும் கொடிக் கட்டிப் பறக்காதா என்று ஏங்குகிறேன் நான். இந்த ஏக்கமும் ஆக்க முமே எனக்கு ஊக்கமளிக்கின்றன.

பேராசிரியர் T. S. சொக்கலிங்கம் அவர்களின் முதுகுளத் தூர் பயங்கரம் என்னும் புத்தகத்தில் இரண்டே சொற்கள் என கவனத்தைக் கவர்ந்தன. ஒன்று அதன் நெற்றியில் ஒட்டிவரும் 'பயங்கரம்'. மற்ளுென்று அதன் உள்ளத்தில் உறைந்துள்ள ஆதிக்கக்காரர்கள். பயமுறுத்துவதும், பயப்படுவதுமான இரு உணர்ச்சிகள் திடீரெனத் தாக்கிக்கொண்டதினுலேதான் இந்தச் சம்பவங்கள் ஏற்பட்டன என்பது என் அபிப்பிராயம். பயப்படும் படியாகப் பலகாலம் நிகழ்ந்தவைகளே, கவலைப்படும்படியான கலகங்களுக்குக் காரணம். பயமுறுத்துவது எவ்வளவு கெட்டதோ அதைவிடக்கெட்டது பயப்படுவது என்பதும் என் அபிப்பிராயந் தான். ஆனல் இரண்டும் அண்ணனும், தம்பியுமே. ஒரு தொழு விற் கூடி வாழும் மக்கள் பாம்போடு பழகும் தீய உணர்ச்சியோடு காலமெல்லாம் பயந்து செத்த பரம்பரையைச் சாகடிக்கக் கால தேவன் செய்த சதி இது. பந்துகூடத் தண்ணீருக்குள் அமுக்க அமுக்க நம் கையை மீறிக்கொண்டு மேலே வர முயல்கிறது. அடிமைத்தனமும் அப்படியே, உண்மையும் அப்படியே-கமுக்கமாய் மூடி மறைக்க முடியாது.

புலி தன் இறையைப் பிடித்ததும் அதை உடனே கொன்று தின்றுவிடாது. உயிரோடு வாயில் கவ்விக்கொண்டு போய்த் தன் குகைக்குள் வைத்துவிட்டுச் சுகமாய்ப் படுத்துத் தூங்கும். பயத்தினுற் பாதி செத்துப்போன அந்தப் பிராணியோ புலி குறட்டைவிட்டுத் தூங்குகிறது என்று தெரிந்தும், எழுந்து ஓடாமல் விழுந்து கிடக்கும். அவ்வளவு பய உணர்ச்சி அதற்கு ஏற்படுகிறது. சாகத் துணியுமே தவிர தப்பிப் பிழைக்கத் துணியாது.

இந்தத் தாலுகாவே ஒரு தனிக் காடு. எந்தக் காலத்திலும் சர்க்கார் இங்குச் சரிவரச் செயல்படவில்லை. தனிக்காட்டு ராஜாக்களே தடிக்கம்பும், அரிவாளும், தீக்குச்சியும் கொண்டு ஆண்டார்கள். துப்பாக்கியும், லத்தியும் சோளத்தட்டைகள் என்று சொல்லப்பட்டன. போஸும் படையும் வருகிறது என்று கூறப்பட்டது. பாரதத்தில் வரும் பகாசுரன் ஏகச்சக்கரபுரத்து மக்களைப் பயமுறுத்தி, வாரம் ஒரு வண்டிச் சோறும், வேண்டிய மாமிசமும் சாராயமும் இரண்டு காளைகளும் ஒரு ஆளும் வாங்கித் தின்று வந்ததுபோல முதுகுளத்தூர் பக்கத்து மறவர்கள் மற்றவர்களிடமிருந்து மாடாடுகளும், தானிய தவசங்களும் வாடிக்கையாய் வாங்கி வருகிருர்கள். கலகங்களால் ஏற்படும் கோர்ட்டுச் செலவுகளுக்குக்கூட எல்லாரிடமுமிருந்தும் மேற்சொன்ன தெண்டத் தீர்வைகள் வசூலிக்கப்படுகின்றன.

பிரமாதமாய் லேபில் ஒட்டிக்கொண்டுவரும் மட்டமான மருந்துகளுக்கிருந்த கிராக்கி இப்போதில்லை. நெற்றியில் விபூதியையும். நெஞ்சில் உத்திராட்சத்தையும் அணிந்து, மட்ட மூளையையும், கெட்ட இதயத்தையும் மூடி மறைத்த காலமும் போய்விட்டது. சிலரைச் சிலகாலம் ஏய்க்கலாம், பலரைப் பல காலம் ஏய்க்க முடியாது என்பதும் தெரிந்துவிட்டது.

அதிகாரம் மனிதனைமுட்டாளாக்குகிறது; அதிக அதிகாரம் அவனை அடிமுட்டாளாக்குகிறது என்கிருர் ஒரு பெரிய ஆசிரியர். (Power corrupts; absolute power corrupts absolutely) அதிலும் அதிகாரம் அதிக வெறிகொண்டுவிட்டால் வெறி நாயை

விட மோசமான, நிலைமையை மனிதன் அடைகிருன். நூற்றுக்கு தொண்ணூறு கேஸ், அது நிவர்த்தி செய்யமுடியாத நோயாகி விடுகிறது.

அன்பும் கடமையும் அக்காளும் தங்கையுமாஞலும் அநேக விஷயங்களில் சக்களத்திகளாகவும் ஆகின்றன. சக்களத்திக்குச் சக்களத்தி வீட்டு நாயைக் கண்டாலும் 'சீன்னு' வரும். கடமை என்ருல் கம்பைத்தூக்குவது என்றும், அன்பு என்ருல் அடிப்பது என்றும் முதுகுளத்தூர் அகராதியில் அர்த்தம் இருக்கிறது. உலகத்தில் உதித்த மகான்களெல்லாம் அன்பே தெய்வம் என்று திரும்பத் திரும்பச் சொன்னுர்கள். அன்பைப் போதிக்காத மகானே இல்லை. ஆனுல் எத்தனை மகான்கள் எவ்வளவு போதித்தாலும் அன்பு மனிதனுக்கு எட்டாப் பொருளாகவும் உலகிற்குக் கிட்டாப் பொருளாகவுமே இருக்கிறது. வில்லினை எடடா! வில்லினை எடடா! அந்தப் புல்லியர் கூட்டத்தை பூழ்தி செய்திடடா என்று கீதை வழி காட்டுகிறது. கம்பினை எடடா! கத்தியை எடடா! அந்த நல்லவர் கூட்டத்தை நாசஞ் செய்திடடா! என்று முதுகுளத்தூர் முனிபுங்கவர் முத்துராமலிங்கத்தேவர் தன் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கிருர்.

மூனேமுக்கால் நாளிகையில் மூன்றுதரம் பூமியைச் சுற்றி வர மனிதன் கருவி கண்டுபிடித்துவிட்ட இக் கலியுலகத்தில், முதுகுளத்தூரார் பழைய கொக்கெறிந்தகல்லை மடியிலேபோட்டுக் கொண்டும், துருப்பிடித்த தொப்புள் அறுத்த கத்தியைக் கரத்திலே பிடித்துக்கொண்டும் இருந்தால், சமூகம் முன்னேறுவதெப்படி? மறவர்கள் வாழாவெட்டிகளா? வாளால் வெட்டிகளா யிருந்தால் வாழா வெட்டிகளே!

முன்னேறும் மக்களைக்கண்டு பின்தங்கிப் போனவர்கள் பொருமைப்படக்கூடாது; தங்களிலும் தாழ்ந்துபோனவர்களைத் தாக்கக்கூடாது: உலகெலாம் நமது; நாமதன் புதல்வர் என்னும் நல்ல எண்ணம் நமக்குத் தோன்றவேண்டும். அப்போது தான் நாம் முன்னேறுவோம்; நமது நாடும் முன்னேறும். நாகரிகம் என்பது முன்னேறும் வாழ்க்கையின் உயிர். அது செத்தால் வாழ்வேயில்லை.

———

சரித்திரம் பேசுகிறது.

"நாட்பட நாட்பட நாற்றமுஞ் சேறும்,
பாசியும் புதைந்து பயன்நீர் இலதாய்,
நோய்க் களமாகி அழிகெனும் நோக்கமோ?
விதியே! விதியே! மறவர் ஜாதியை
என்செய நினைத்தாய் எனக்குரையாயோ?"

——மகாகவி

பன்னிரெண்டாம் நூற்றுண்டில் பாமினி ராஜ்யமும், விஜயநகர ராஜ்யமும் அக்கம் பக்கமாயிருந்தன. பாமினி சுல்தான்கள் வடக்கிலும்,விஜயநகரராஜாக்கள் தெற்கிலுமிருந்து தென்னிந்தியா முழுமையையும் ஆண்டார்கள். கிருஷ்ண தேவராயரோடு விஜயநகரம் வீழ்ந்துவிட்டது. பாமினி பாய்ந்தது தெற்கே. தடுக்கச் சேர சோழ பாண்டிய ரில்லை. தென்கீழ்க் கோடியில் சேதுபதிகள் மட்டு மிருந்தனர். அவர்கள் அரசு மிகப் பேரசாகவுமில்லை; மிகச் சிற்றரசாகவுமில்லை. முக்கோணவடிவில் கிழக்கே கீழக்கரை, மேற்கே சூலக்கரை. வடக்கே கோடிக்கரைவரை அந்த ராஜ்யம் அகண்டிருந்தது,

சேதுபதிகள், செம்பிநாட்டு மறவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சோழர்களுக்குச் செம்பியர் என்று ஒரு பெயருண்டு. சோழ நாடு செம்பி நாடு என்றுஞ் சொல்லப்பட்டது. செம்பி நாட்டார் எப்போது பாண்டிய நாட்டிற் புகுந்தார்கள் என்பதற்குச் சுவடேயில்லை. எந்தச் சுவடியிலும் அந்தத் தகவலுமில்லை. தடமற்றுப்போன சரித்திரம், சோழாந்தக பாண்டியன் காலத்தில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் கொள்வினை கொடுப்பினை யுண்டாகி, ஆதி சேதுபதிகள் செம்பியர்களோடு சம்மந்தமாகிவிட்டார்கள் என்று சொல்லுகிறது.

ராயர் காலத்தில் பாளையப்பட்டு முறை பரவியது. பாளையம் என்றால் படை என்று பொருள். படை திரட்டியவர்கள் எல்லாருமே பாளையக்காரர்கள். மறவர் பாளையங்களும் நாயக்கர் பாளையங்களும் தென்னிந்தியாவில் இருந்தன.

கிழுவ நாடு என்று ஒன்று இருந்தது. அது எங்கிருந்ததென்று திட்டமாய்த் தெரியவில்லை. சோழ நாட்டெல்லையில் தெலுங்கு தேசத்தைச் சேர்ந்து இருந்திருக்கவேண்டும் - ஹைதராபாத்துக்குக் கிழக்கே நெல்லிமாரலா, நௌபதாதூசி என்னுங் கிராமங்களை யொட்டி, அங்கிருப்பவர்கள் 'தேவ' என்னும் பட்டம் உடையவர்கள்; அய்யனார் தெய்வத்தை வணங்குகிறவர்கள். அவர்களே தென்ஜில்லாக்களில் இப்போதிருக்கிற கொண்டையங்கோட்டை மறவர்களின் முன்னோர்களா யிருந்திருக்கவேண்டும்.

கோட்டை என்பதற்குக் கூட்டம் என்று ஒரு பொருள் உண்டு. கொண்டையன்கோட்டை என்றால் ஐயனை (குல தெய்வமாய்) கொண்ட கூட்டத்தார் என்று அர்த்தம். அந்தக்காலத்தில் ஜாதிகளும் குலங்களும் அவரவர் வணங்கிய தெய்வத்தின் பெயராலேயே வழங்கப்பட்டன. கிறிஸ்துவை வணங்கியவர் கிறிஸ்தவர், முகமதுநபியைப் பின்பற்றியவர் முகமதியர், சிவனை வணங்கியவர் சைவர், விஷ்ணுவை வணங்கியவர் வைஷ்ணவர் என்பது போல்.

பெருக்கெடுத்து வந்த முஸ்லீம் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த, தக்கபலம் பொருந்திய அரசன் ஒருவனும் அப்போது தென்தேசத்தி லில்லை. நவாபு சேனையோ நாடதிரத் திக்குவிஜயம் செய்தது - ஆண் சிறை பெண் சிறை பிடித்தது. பயந்து ஜனங்கள் கூட்டங் கூட்டமாய்ப் பெயர்ந்தனர். இடம் பெயர்ந்த ஒரு கூட்டம் கிழுவ நாட்டிலிருந்து புறப்பட்டது. அதில் மறவர்களு மிருந்தார்கள்; நாயக்கர்களு மிருந்தார்கள். கையோடு ஐயனாரையுங் கொண்டு வந்தனர்.

ஆறு இருகரையும் பெருகிவந்தது. பொழிந்துவரும் பெருவெள்ளம் வடிவதெப்போ, வழிநடப்ப தெப்போ-வால் பிடி தோள்பிடியாய்ப் பகைவர் படை நெருங்கி வரும் போது? ஐயனுரை ஆற்றிலே யெறிந்து விட்டு, பெண்களை யும் பிள்ளைகளையும் அதிலேயே தள்ளி விட்டு, பகைவரோடு போரிட்டு மடிவதென்று திட்டமிட்டனர். ஐயனுர் வழி விட்டார். அதனுல் அவர் வழிவிட்ட ஐயனுர் ஆனுர். ஆற்றையும், அநேக துயர்களையுங் கடந்து, அவர்கள் ஆப்ப னுடு என்று அழைக்கப்படும் முதுகுளத்தூர்ப் பகுதிக்கே வந்தனர்.

கிழுவநாட்டிலிருந்து வந்தவர்க ளாகையால் அவர் களுக்குக் கிழுவர்கள் என்ருெரு பெயருமுண்டு. கிழுவர் என்பதைக் கிழவர் என்று திருத்திக்கொண்டார்கள். வழி விட்ட ஐயனுருக்கு வழிவிட்டக் கிழவன் என்றும் மனித னுக்குக் கிழவன் அல்லது கிழவத்தேவன் என்றும் பெயர் வைக்கப்பட்டது. இது இன்னும் வழக்கத்திலிருக்கிறது.

ஆப்பனுட்டில் அப்போது, கடுகு சந்தையைத் தனிச் சந்தையாய்க்கொண்ட காரணமறவர் பாளையப்பட்டு இருந் தது. இடம் பெயர்ந்துவந்த கொண்டையங்கோட்டை மறவர்களுக்கு இடந்தந்து, காரணமறவர்களும் செம்பி நாட்டு மறவர்களும் ஆதரித்தனர். இருந்தவர்களைவிட வந்தவர்கள் பெருந்திரளா யிருந்தனர். ஆகையால் அவர்கள் உடனேயே தங்கள் ஆதிக்கத்தை ஆரம்பித்துக்கொண்டனர்.

நீரடிக்க நீர் விலகாது என்பார்கள். என்ருலும் வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தை அடித்துக்கொண்டு போவது இயற்கை. ஆறு கடலிற் போய்க் கலந்தாலும், கலங்கலான அதன் நீர், கடல் நீரோடு சிலதூரம் வரை சேர்வ தில்லை. அதுபோலவே கொண்டையங்கோட்டை மறவர் கள், காரணமறவர்களோடும், செம்பி நாட்டு மறவர்களோ டும் இன்னும் ஒன்றுசேரவில்லை-சம்மந்தம் சார்படி உள்பட-

அகஸ்த்மாத்தாய் எங்கோ சில சம்மந்தங்கள் ஏற்பட்டிருந்தால் அதைக்கொண்டு இவ் வகுப்புகள் பகுப்பின்றிச் சேர்ந்துவிட்டன என்று சிறப்பாய்ச் சொல்ல முடியாது. சேரக்கூடாதென்றுஞ் சொல்லக் கூடாது. ஏனெனில் ஜாதிகள் பிரிந்துகொண்டே போகக் கூடாது. ஜாதிப் பிரிவினையால் வ்குப்புவாதமே வளரும்; வெறுப்பும் பகையும் ஏற்படும்; மனிதர் ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக் கொண்டு சாவார்கள்.

ஆப்பநாடு வந்த கொண்டையங் கோட்டையார், கமுதிக்கு மேற்கே சோலையும் வாவியும் சூழ்ந்த வெளியில், தாங்கள் கொண்டு வந்த வழிவிட்டக் கிழவனுரைக் கொலுவிருத்திவிட்டுப் பல திசைகளிலும் பிரிந்து குடிபுகுந்தனர். முதலிற் குடியேறிய ஊருக்கு முதல் நாடு என்று பெயரிட்டனர். அது கமுதிக்குத் தெற்கே மூன்று மைல் தொலையிலிருக்கிறது. இவ்வாறு பல ஊர்களை உண்டாக்கியும் பல ஊர்களிற் குடியேறியும் அவர்கள் இந் நாட்டினராயினர்.

மகாத்மா காந்தியால் ஹரிஜனங்கள் என்றும், பகுத்தறிவு வாதிகள் என்று சொல்லிக்கொண்டவர்களால் ஆதித் திராவிடர்கள் என்றும், பரம்பரை பரம்பரையாய்க் குடும்பர்கள் என்றும் அழைக்கப்படும் பள்ளர்களும், இந் நாட்டின் பூர்விகக் குடிகளே. ஆதியில் இருந்தவர்களுக்கும் பாதியில் வந்தவர்களுக்கும் ஒரு ஊடல் இருந்தது. அது மனதுக்கும் மனதுக்கும் நடந்த சச்சரவு. ஒருவரையொருவர், தொடாதிருந்தனர். தொடலாம் என்று உரிமை வந்ததும் கோபம் வருகிறது; தடிக்கம்பையும் அரிவாளையுந் தூக்குகிருர்கள்; தாக்குகிருர்கள்.

ஆமை புகுந்த விடும், அமீனு புகுந்த விடும் உருப்படாது என்று ஒரு மொழியுண்டு. அது பழமொழி. இந்து மதத்தில் ஒரு ஆமையல்ல, பல ஆமைகள் புகுந்திருக்கின்றன. அதனுலேதான் அது உருப்படவில்லை. தீண்டாமை மிகப்பெரிய

தீமை. இந்துமதம் தேய்ந்ததற்குத் தீண்டாமையே காரணம். கிறிஸ்து மதமும் இஸ்லாம் மார்க்கமும் இந்நாட்டில் பரவிய தற்கும் இதுவே காரணம்.

ஒரு சமூகம் முன்னேறத் துடித்தது; இன்னொரு சமூகம் அதை அடித்தது. இரு சமூகங்களிடமும் மிதமிஞ்சிய உணர்ச்சி இருந்தது. எறும்பு தள்ளத்தள்ளக் கிட்டவே வரும். குழந்தை எதைச் செய்யாதே என்கிறோமோ அதையே சொல்லச் சொல்லச் செய்யும். உணர்ச்சியும் அப்படிப் பட்டதே.

நாடார் சமூகம், நம் நாட்டின் நல்லசமூகங்களில் ஒன்று. இதரசமூகங்கள் எவ்வளவுக் கெவ்வளவு தூரத்தில் தள்ளி வைத்ததோ, அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரத்தில் அது முன் னேறி வருகிறது. "பொதுப்பாதைகளில் நடக்கக் கூடாது, பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுக்கக் கூடாது, பொதுக்கோயில்களில் கும்பிடக் கூடாது, பொதுப்பள்ளி களில் படிக்கக் கூடாது என்று ஒரு காலம் அது தடுக்கப் பட்டது. அத்தனை தடைகளையும் அகற்றிக்கொண்டு அது இப்போது முன்னேறியிருக்கிறது. சொந்தமாய்க் கிணறுகள் வெட்டிக்கொண்டும், கோயில்கள் கட்டிக்கொண்டும், பள்ளிகள் அமைத்துக்கொண்டும் அது முன்னேறியது. ஹரிஜனங்கள் அப்படிச் செய்ய முடியவில்லை, அரசாங்கம் வந்து அதைச் செய்து கொடுக்கவேண்டியதிருக்கிறது.

நல்லவர்கள் நாட்டில் இருக்கக் கூடாதென்பதற்காக எத்தனையோ கொடுமைகள் நடந்திருக்கின்றன. அகிம்சை யைப் பின்பற்றும் மிருகங்கள்தான் உலகத்தில் அதிகமாய் அடித்துக் கொல்லப்படுகின்றன. துஷ்டமிருகங்கள், கிட்டப் போகக் கூடப் பயப்படுகிறோம். என்ன சூரத்தனம்?

தானும் வாழ்ந்து பிறரையும் வாழவிட்டால்தான் உலகில் அமைதி நிலவும். மனித குலத்தின் சிக்கலான பல

பிரச்னைகளைத் தீர்க்கச் சகவாழ்வு ஒன்றே வழி. கொலை வெறியில் அது உருவாகாது. அகிம்சையிலேயே அது வேர் விட்டுத் தழைக்கும் என்பது தேவர்களுக்குத் தெரிய வில்லையே!

எப்படியோ காலமெல்லாம் மறவர்கள், தாங்கள்தான் மற்றவர்களைவிடத் தாட்டியர்கள் என்றும், மற்றவர்களெல் லாம் தங்களுக்கு உழைத்துக் கொடுக்கவும் உபயோகப் படவுமே படைக்கப்பட்டவர்கள் என்றும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

தன் வயிற்றை நிரப்புவதற்காக, தன் மனைவி மஞ்சள் குளிப்பதற்காகப் பிறரைத் துயரில் வீழ்த்துவது எவ்வளவு கெட்டது? ஆயுளெல்லாம் பலர் தேடிவைத்த பொருளை ஒரே இரவில் கூசாமல் கொள்ளையடிப்பது நல்லதா? நாக ரிகம் வளர்ச்சியடையாத காட்டுமிராண்டிக் காலத்தில் மனி தன் வேடனாகவே இருந்தான் என்பதும், கொலை களவுகள் செய்தான் என்பதும் வாஸ்தவம். ஆனால் அவன் கூட நம்மைப்போல் கொழுக்கவைத்துக் கொல்லவில்லையே! நம்மை ஒருவரும் ஒன்றுஞ் சொல்லப்படாது, நாம் எல்லா ரையும் எப்படியும் வையலாம், என்னமுஞ் செய்யலாம் என்னும் குணம், எவ்வளவு தடித்தனமானது? குடித்தனத் துக்கு உதவுமா? கத்தியைத் தீட்டுங் காலம் போய்விட்டது; புத்தியைத் தீட்டுங் காலம் இது.

எண்ணற்ற துயர் நிறைந்த நிலவுலகில், ஒரு நாடு இன் னொரு நாட்டின் சுதந்திரத்திலே தலையிட்டு, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின் விவகாரத்திலே குறுக்கிட்டுக் குழப் பத்தை உண்டாக்குவதினாலேதான் அடிக்கடி அமைதி யின்மை ஏற்படுகிறது. இடையிடையே எப்போதாவது ஒருவர் வந்து அமைதி என்று ஒன்று உண்டு, அதனை அடையும் வழியும் ஒன்று உண்டு என்று போதித்தாலொழிய நமக்குப் புத்திவருவதேயில்லை. அடைமழையில் ஒளிவீசிச்

செல்லும் மின்னலைப்போல் அவர்கள் தோன்றி மறைகிருர்கள். பூசையறையின் நந்தா விளக்கைப்போல் மங்கலாயிருந்தாலும் எரிச்சலே இல்லாத அமைதியை எவ்வளவு ஆவலோடு எதிர்பார்க்கிறேம். **காலம் எவ்வளவு கற்பித்தாலும் மனிதன் உதிரத்தில் பழங்காலத்து மிச்ச மீசாடி இருக்கிறதென்பது உண்மையே.**

ஒரு சமூகம் அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் அதுபாட்டுக்கு முன்னேறினல், விடாப்பிடியாய் வேண்டுமென்றே அதைத் தாக்கவேண்டிய அவசியம் இன்னெருசமூகத்திற்கு ஏன் வந்தது? 1860-ம்ஆண்டில் அருப்புக்கோட்டை, பாளையம்பட்டி ஆகிய இடங்களிலும், 1899-ல் சிவகாசியிலும், 1918-ல் கமுதியிலும், மறவர்கள் நாடார் கடைகளைக் கொள்ளையடித்து, வீடுகளில் தீ வைத்தார்கள். அடியோடே அச்சமூகத்தை அழித்துவிடுவது என்று திட்டமிட்டுத் தொடர்ச்சியாய்ப் பலகால் முயற்சி செய்தும் அது அழிந்துவிடவில்லை; அருகிவிடவுமில்லை. அநேக ஆண்டுகள் மழையே யில்லாமற் போனலும் பூமியில் எந்தப் புல் பூண்டாவது அற்றுப்போகிறதா? ஆயிரங்காலத்துப் பயிரான மனிதப் பூடு அவ்வளவு அற்பவித்தல்ல அற்றுப்போக. விசித்திரவீரியனுடைய புத்திரிகளும், அக்காளும் தங்கையுமான அம்பிகை அம்பாலிகை ஆகியவர்களின் புத்திர பௌத்திரர்களுக்குள்ளே மித்துருபேதத்தை உண்டாக்கிப் பூபாரத்தைக் குறைக்க, மகாபாரதமே யுண்டானலும், முடிவில் பரிக்ஷித்து ஒருத்தனே மிஞ்சினன் என்று பாரதக்கதை சொன்னலும், ஆயிரம் ஆயிரம் மைல் அகல நீளமுள்ள அகண்ட நிலப்பரப்பை ஒரே குண்டினல் அழிக்கத்தக்க அணுசக்தியைக் கண்டு பிடித்து அதை யுத்தத்தில் உபயோகித்தாலும், மனிதக்கொடி அற்றுப்போகாத, வெட்ட வெட்டச் சிம்பு சிம்பாய்த் தளிர்க்கும் வேதாள விருக்ஷமாகவே யிருக்கிறது. ஒரு கோளத்திலிருந்து ஒரு கோளத்திற்குப் போக, விஞ்ஞானம் வழிகண்டு

விட்டது. செவ்வாய் கிரகத்தில் நிலம் வாங்குவதற்குச் சிலர் அச்சாரங்கூடக் கொடுத்திருக்கிருர்கள். என்ருலும் பூகோளத்தை யாரும் காலிசெய்யப்போவதில்லை என்று உறுதி கூறுகிறேன்.

ஆப்பநாட்டை ஆளப்பிறந்தவர்கள் நாங்களே என்று ஸ்ரீ முத்துராமலிங்கத்தேவர் அவர்கள் சொன்ஞல், அதைக்கேட்டு எல்லாரும் கைதட்டிஞல், அது இக்கலியுகத்தில் ஒரு விந்தையா? அல்லது நிந்தையா? அது என்னமோ எனக்குத் தெரியாது, ஆனுல் ஜாதிகள் தேசங்களை ஆண்டதாகச் சரித்திர மாணவஞ யிருந்தும் எனக்கு ஞாபகமில்லை. இந்தியாவிலுள்ள ஆயிரத்தோரு ஜாதிகளும், அது அது பாட்டுக்குத் தேசத்தைப் பிய்த்துக்கொண்டால், இந்தியாவின் கதி என்ஞவது? கோவணத்துக்குக்கூட உதவாத கந்தையாகிவிடாதா? பாகிஸ்தான் பிரிந்ததே போதும் போதும் என்ருகிவிட வில்லையா? பத்து வருஷங்களாயினும் பிரிந்து, இன்னும்ஒருஉருப்படியான அரசாங்கத்தைஅதஞல்அமைக்க முடிகிறதா? அல்லது ஒழுங்காய் ஒரு தேர்தலாவது நடத்த முடிகிறதா? இந்தியாவுக்கு ஒரு தீராத தலைவலியாயிருப்பதைத்தவிரத் தனக்காக ஒரு நல்ல காரியத்தைக் கூடத் தன்ஞல் செய்ய முடியாத நிலைமையிலிருக்கிறது. தேவர்ஸ்தான் தோன்றிஞல்? ஒரே சர்வநாசந்தான். வேல்கம்பும், அரிவாளும், தீக்குச்சியுமே ஆளும் - அவைகள்தானே இப்போதும் ஆளுகின்றன? ஆளப்பிறந்தவன் என்று எவன் ஒருவன் மமதையோடு சொல்லுகிருஞே அவன் அதே மமதையிஞல் மாளப்பிறந்தவனேயொழிய வாழப்பிறந்தவனல்ல. இவ்வளவு காலம் இவர்கள் ஆண்டது போதாதா? மற்றவர்கள் மாண்டது போதாதா? இதுவா கொற்றம்? குற்றம் இல்லையா?

'ஓம்' என்று பிரிட்டிஷ் அரசாங்கம், குற்றபரம்பரைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. 1924-ல் அதை அவர்கள் மீது பிரயோகித்தது. காங்கிரஸ் அரசாங்கம் வந்ததும் வராததுமாய் ரத்துச் செய்யும்வரை அது அமுலிலிருந்தது.

குற்றபரம்பரைச் சட்டமே நீதமானதா அநீதமானதா என்று நான் அபிப்பிராயம் சொல்ல வரவில்லை. ஆனால் பிள்ளை பிள்ளை தலைமுறையாய்க் குற்றமே செய்து கொண்டு ஒருகூட்டம்இருந்தால், அதைத்தடுப்பது சர்க்கார் கடமையா இல்லையா என்று கேட்கிறேன். குழந்தை சுகத்திற்குத் தாயானவள் கசப்பு மருந்து புகட்டுவது அவள் கடமை, அதைக்கண்டிப்பது மடமையல்லவா? அரசாங்கம் என்பது ஜனங்களின் தாய். மாற்றுந்தாய் மனப்பான்மையில் எந்தச் சர்க்காரும் செயல்படாது.

சீட்டி ஆக்டை எடுத்ததைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் இப்போது எவ்வளவோ பெருமையடையலாம். காங்கிரஸ் சார்பில் தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்கள், அச்சட்டத்தால் அவதிப்பட்டவர்களையும் அவர்கள் சந்ததியார்களையும் அணுகும்போது, நாங்கள்தான் சீட்டி ஆக்டை எடுத்தவர்கள் என்று நெஞ்சுதட்டிச் சொல்லலாம். எலக்ஷனில் ஜெயிப்பதற்காக அப்படிச் சொன்னாலும், உண்மையில் அப்பரம்பரையினர் அக்கெட்ட வழக்கத்தை விட்டுவிட்டார்களா என்பதும் அக்காங்கிரஸ்காரர்கள் அவர்களிடமுள்ள அக்கெட்ட பழக்கத்தை மாற்றியமைக்க வழிவகை செய்தார்களா என்பதும் சிந்திக்கத்தக்க விஷயங்கள்.

கட்டவிழ்த்து விட்டதும் கன்றுக்குட்டி காடெல்லாம் ஓடுவது போல, சட்டம் எடுக்கப்பட்டதும் கொலை, கொள்ளை, தீ வைப்பு, வழிப்பறி முதலியவைகளைத் தலைமுறை தலைமுறையாய்ச் செய்து பழக்கமுடைய அந்த ஜனங்கள், கட்டுப்பாடின்றி நாடெங்குஞ் செய்யும் வாய்ப்படைந்தார்கள். லைசென்ஸ் முறை எடுபட்டு, போதைதரும் மதுபானம் அருந்துவது குற்றம் என்று சட்டஞ் செய்ததும், ஊர்தோறும் வீதிதோறும் வீடுதோறும் மது உற்பத்திசாலைகள் தோன்றுவது போல, மேலே சொன்ன குற்றங்களும் மிகைத்தன.

இவ்வாறு கூறுவதால், திரும்பவும் சீட்டி ஆக்டை கொண்டுவர வேண்டுமென்று நான் சர்க்காருக்குச் சிபார்சு செய்கிறேனென்று அர்த்தமில்லை. எந்தச் சட்டமும் அதன் அளவில் குற்றஞ் செய்கிறவர்களைத் தண்டிக்கக்கூடியதாயிருந்தாலும் அவர்களைக் குற்றஞ்செய்யவிடாமல் தடுக்கும் நோக்கமுடையதாகவு மிருக்கிறது. குற்றஞ் செய்கிறவர்களுடைய வாழ்க்கையானது நல்லவழியில் நடப்பதற்கான வாய்ப்புகளும், குற்றமிழைக்கப் படுகிறவர்களுக்குப் போதுமான பாதுகாப்புகளும் செய்து வைத்துக்கொண்டு, சட்டத்தை எடுத்திருக்க வேண்டும். சும்மா சட்டத்தை மட்டும் எடுத்துவிட்டதால் என்ன பயன்? ஆப்பைப்பிடுங்க வேண்டுமென்று குரங்கு அவசரப்பட்டது. ஆனுல் அதே சமயம் தன் வாலையும் காலையுங் காத்துக்கொள்ள வேண்டுமென்று அது நினைக்கவில்லையே? பேச்சைக் கேட்டுக் கூட்டம் கைதட்ட வேண்டுமென்று விரும்புகிற பேச்சாளர்கள், அதேசமயம் நாக்கையுங் காக்க வேண்டு மென்பதை மறந்துவிடுகிறுர்களே? சங்கடம் வந்த பிறகுதானே சங்கதி தெரிகிறது?

குற்றம்பரம்பரைச் சட்டத்திற்குப் பதிலாக, வாடிக்கைக் குற்றவாளிகள் சட்டம் இருக்கிறதே என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா ? வாடிக்கைக் குற்றவாளிகள் சட்டமே வேடிக்கையானது. எந்தப் பெரிய குற்றவாளியையும் அந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவருவது எளிதல்ல. அத்தம் பெரிய குற்றவாளிக்கு விரோதமாய் யார் சாட்சி சொல்லுவார் ? சொல்லிப் பிழைக்க முடியுமா ? வீடு, காடு, ஆடு, மாடுகள்தான் பிழைக்குமா ? சாட்சியில்லாமல் கேசு ருசுவாகாதல்லவா ?

சீட்டி ஆக்டை எடுத்த கையோடேயே சிறப்பாகச் சில நன்மைகளைச் சர்க்கார் செய்திருக்கவேண்டும். திருமங்கலம் தாலுகாவில் கள்ளர் ரேக்ளமேஷனைக் கொண்டுவந்ததுபோல், குற்றம் செய்கிறவர்கள்மேல் கருணை வைத்து இதைச் செய்

யாவிட்டாலும், அவர்களால் அல்லலுறும் அப்பாவிகளான இதர ஜாதியார்மீது இரக்கம்வைத்தாவது இதைச் செய்திருக்கலாம். இல்லையென்பது ஒரு குறையே!

முதுகுளத்தூர் தாலூகாவில் தேவர்களும் சேர்வைகாரர்களும் சேர்ந்து மொத்த ஜனத்தொகையில் 45 சத விகிதம் இருக்கிறார்கள். ஹரிஜனங்கள் 20 சத விகிதம். பெரும்பாலும் பள்ளர்கள். பகடைகள் எனப்படும் சக்கிலியர்கள் கொஞ்சம் இருக்கிறார்கள். பழமை மறவாமல் அவர்கள் அப்படியே இருக்கிறார்கள். பள்ளர்கள் படித்து முன்னேறத் துடிக்கிறார்கள். புதுமையை அவர்கள் விரும்புவது மறவர்களுக்குப் பிடிக்கவில்லை. தாங்களும் முன்னேறாமல் பிறரையும் முன்னேறவிடாம லிருப்பதான பழைய குணம் அவர்களிடமிருப்பதே அதற்குக் காரணம். படிப்பின்மையும் வறுமையுமே அவர்களை அப்படிச் செய்யச் சொல்லுகிறது.

மறவர்களும் பள்ளர்களும் தொன்று தொட்டு தகப்பனும் பிள்ளையும்போல் வாழ்ந்தார்கள். இலக்கிய காலத்திலிருந்து பள்ளர்கள் விவசாயப் பண்ணையாட்களாகவும், விவசாயிகளாகவு மிருந்துவந்தார்கள். விவசாயத்தில் மறவர்களோடு பள்ளர்களும் ஒத்துழைத்தார்கள். களவு, கலகம் முதலிய தீய காரியங்களிலும் அவர்கள் ஒத்துழைத்தார்கள். கன்னவாசலில் பள்ளனைக் காவலுக்கு வைத்துவிட்டு மறவன் உள்ளே போவான். மறவனை நம்பிப் பள்ளனும் எதிலும் இறங்குவான். கம்புபிடித் தடிப்பதிலும் கடுமையாகப் பொருதுவதிலும் அவர்கள் ஒருவருக்கொருவர் இளைத்தவர்களல்ல. ஆனாலும் மறவர்களின் மிஞ்சிய ஜனத்தொகை பள்ளர்களைக் கொஞ்சம் அஞ்சவைத்தது.

இவ்வளவிருந்தும் அவர்கள் தீண்டப்படாதவர்களாகவே இருந்தார்கள். இந்து மதம் தாழ்ந்த ஜாதி என்று அவர்களைத் தள்ளி வைத்திருந்தது. உயர்ந்த ஜாதியாரைத் தொட

முடியாது; கோயிலுக்குள் போக முடியாது; கிணறு குளங்களில் தண்ணீர் எடுக்க முடியாது; தீண்டாமையை யொழித்து, ஆலயத்துள் அழைத்து, ஹரிஜனங்கள் என்று அவர்களை அணைத்துப் பிடிப்பது அநேகருக்குப் பிடிக்கவில்லை. காங்கிரஸ் அரசாங்கம் அவர்களுக்குச் சம உரிமையளித்ததும், சலுகைகள் தந்ததும், சட்டங்கள் செய்ததும் ஜாதி இந்துக்களுக்குச் சகிக்கவில்லை. தாட்டியக்காரர்கள் தடுக்கிறார்கள்.

கைதூக்கிவிடும் காங்கிரசிடம் ஹரிஜனங்கள் அன்பு செலுத்தினால் அது அப்படியொன்றும் வியப்பில்லை. காங்கிரஸ் அரசாங்கம் நீடூழி வாழவேண்டுமென்று அவர்கள் விரும்புவதும் விந்தையல்ல. காங்கிரஸை எதிர்க்கும் மற்ற கட்சிகள் அதை வெறுப்பதும் இயற்கையே! என்றாலும் தங்களுக்கு வோட்டுப் போடவில்லை என்பதற்காக அவர்களைப் பகைக்கக்கூடாதென்னும் சின்ன விஷயங்கூட அந்தக் கட்சிக்காரர்களுக்குத் தெரியவில்லை; தீமை செய்யத் துணிகிறார்கள்; தீமையே செய்கிறார்கள்.

ஏழரைநாட்டுச் சனி

(32 முதல் 39 வரை)

> "ஓரஞ் செய்திடாமே! தருமத் துறுதி கொன்றிடாமே
> சோரஞ் செய்திடாமே பிறரைத் துயரில் வீழ்த்திடாமே
> ஊரை யாளு முறைமை ...ஓர் புறத்து மில்லை"—மகாகவி

அதிர்ஷ்டம் அம்மானை ஆடியது. காய்கள் உருண்டன. மனிதர் மதிமயங்கினர். நல்லது கெட்டது தெரியாதபடி கண்ணைக் கட்டிவிட்டது. நாட்டு மாந்தர் ஆட்டு மந்தையாயினர். கண்ணாடிச்சில் காலில் தைத்தபோது ஒன்றுமே தெரியவில்லை. அப்புறந்தான் அது எவ்வளவு ஆழத்தில் தைத்திருக்கிறதென்று தெரிகிறது.

இருபது வருஷங்கள் இப்படி விதி விளையாடியது. எல்லாம் நேற்று நடந்ததுபோ லிருக்கிறது. பகலில் நினைவில் வருகிறது; இரவில் கனவில் வருகிறது. திறந்த கண்களை விட மூடிய கண்களுக்கு அது எவ்வளவு பயங்கரமாய்த் தெரிகிறது? சாத்தான் ஆட்சியில் மூளைக்குச் சனி பிடிக்கிறது என்பதுந் தெரிகிறது.

1937-ல் மாகாண சுயாட்சி வந்தது. அது இரட்டையாட்சி என்று சொல்லப்பட்டது. வெள்ளை ராஜாக்கள் ஒரு புறமும் கறுப்பு ராஜாக்கள் ஒருபுறமும் இருந்து இந்நாட்டையாண்ட காலம். கறுப்பு ராஜாக்களைக் கண்டெடுக்க வேண்டியது வந்தது. எலெக்ஷன் வைத்தார்கள்.

அப்போது கட்சிகள் இல்லை. ஆளுங்கட்சியும் அதற்கு எதிர்க்கட்சியுந்தான் இருந்தன. ஆளுங்கட்சியோடு போராடிய காங்கிரஸ் கட்சி, போட்டி போட்டது. சுதேசி ராஜாக்களும், குட்டி ஜமீந்தார்களும், பெரிய பணக்காரர்களும் ஆளுங்கட்சியோடிருந்து காங்கிரஸ் கட்சியை யெதிர்த்தார்கள். அவர்கள் எல்லாருந் தோற்றுர்கள். இந்தியா முழுவதிலும் இப்படியே நடந்தது.

பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் களத்தில் வந்து தோன்றினர். அரசியல் அப்போது அவருக்குப் புதிது பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு வந்தாரோ என்னமோ? காங்கிரஸ் அவரைக் கண்டுபிடித்து அவர் தொகுதியிலேயே நிறுத்தியது. அது அவருக்கு பட்டா பாத்தியமாகி விட்டது.

தேவரை யெதிர்த்து சேதுபதி நின்றுர். அவர் அந்தத் தொகுதிக்கு ஜமீந்தார். அதைச் சூழ்ந்திருந்த தொகுதிகளுக்கும் அவரே ஜமீந்தார். அவ்வளவு பெரிய ஜமீந்தார். அவருக்கே வாரமும், வரியும் செலுத்துங் குடிகளே வோட்டர்களாயிருந்தும் தோற்றுரென்றுல் அது காங்கிரஸிற்கு எவ்வ

ளவு பெரிய வெற்றி ? இதனுல் சேதுபதி தோற்ருர், தேவர் ஜெயித்தார் என்று அர்த்தமில்லே ;-ஜமீந்தார் தோற்ருர் ; காங்கிரஸ் ஜெயித்தது என்பதே பொருள் !

ஆனுல் தேவர் அதை அப்படிக் கருதவில்லே. தான் பெரியவரா, தானிருக்கும் ஸ்தாபனம் பெரியதா என்ற வாதத்தில் இறங்கினுர்—குழந்தை பெரியதானதும் தொட்டிலேச் சியறி தாய் நினேப்பது போல ! தாயின் மூலேப்பாலேக் குடித்து, முந்தானேயிலே துயின்று, முன்னுளிலே வளர்ந்த சில குழந்தைகள் பின்னுளிலே அதே தாயைத்தானே உதைப்பதும் அடிப்பதும் உண்டு. அணேத்த தாயை அடித்த இந்த விந்தை முத்துராமலிங்கத் தேவர் விஷயத்தில் முழுதும் உண்மையாகி விட்டது.

1933-ல் அவர் காங்கிரஸில் வந்து சேர்ந்தார். அதற்கு முந்தியே அவருக்கும் அவர் அப்பாவுக்கும் ஒரு சச்சரவு நடந்தது. தான் பெரியவரா தன்னேப்பெற்ற தந்தை பெரியவரா என்பதான அவ்வழக்கில், முட்டைக்குள்ளே வளருங் குஞ்சு பெரியதானதும், முட்டையைத்தானே உடைத்துக்கொண்டு வெளியே வருகிறதென்பது தெரிந்தது.

வீட்டிலே தொடர்ந்த வில்லங்கம் வீட்டோடு முடிந்திருந்தால், அல்லது நாட்டிலாவது நாசகரமாய்ப் பரவாது இருந்திருந்தால், தேவமார் வாழ்வு இத்தொகுதியில் இருபத்தைந்து வருஷங்களில் எவ்வளவோ நன்ருய் விடிந்திருக்க வேண்டும். இல்லேயே ?

ஒவ்வொரு கதையிலும் வில்லன் என்ருெரு பாத்திரம் வருவதுண்டு. வில்லன் என்னும் வார்த்தைக்கு வில்லேயுடையவன் என்று அர்த்தஞ் செய்துகொண்டாலுஞ் சரி, வில்லெய்ன் (Villain) என்னும் ஆங்கில மொழிக்குள்ள அர்த்தத்தை வைத்துக்கொண்டாலுஞ் சரி அதைப்பற்றி இந்த நேரம் எனக்கு அக்கறையில்லே. பாரதக் கதையில் துரியோ

தனனும், இராம சரிதையில் இராவணனும் வில்லன்களாக வருவதுபோல், முதுகுளத்தூர்க் கதையில் முத்துராமலிங்கத் தேவர் வருகிருரென்பதற்கு ஏப்பை சாப்பையான ருசுவல்ல: கோர்ட்டு தஸ்தாவேஜே யிருக்கிறது. இருபது வருஷத்துக் கோர்ட்டு ரெக்கார்டுகள் முத்துராமலிங்கத் தேவரை மூர்க்க குணமுள்ளவர் என்று மொழிகின்றன. காங்கிரஸிலிருந்த காலத்திலும் அவர் களங்கமற்றவரா யிருக்கவில்லை. ஒரு மாமாங்கம் அவர் காங்கிரஸி லிருந்திருக்கிருர். நாலணுக் கொடுத்துக் காங்கிரஸில் சேர்ந்துவிடுவதால் மாத்திரம் எந்த மனிதனும் நல்ல மனிதனுகிவிட முடியாது. புதிய மனிதனைப் படைத்து, அவன்மூலம் புது உலகைப் படைக்கக் காந்தீயம் உதவினுலும், நாலணுவில் யாரையும் நல்லவனுக்கும் ஜால வித்தையைக் காங்கிரஸ் கற்கவில்லை என்பதே என் அபிப் பிராயம். காங்கிரஸில் அவரைக் கொண்டுவந்து சேர்த்தவர் கள் இன்னும் காங்கிரஸிலேயே இருக்கிருர்கள். ஆனுல் அவர் மட்டும் காங்கிரஸில் இல்லை. "இந்தக் கொலை கொள்ளி மனிதனைக் காங்கிரஸிற் கொண்டுவந்து சேர்த்தது யார்?" என்று ஒரு சமயம் ராஜாஜி என்னைக் கேட்டார். அப்போது அவர் சென்னை முதன் மந்திரியா யிருந்தார். எனக் குச் சுருக்கென்றது. என்னமோ தைத்ததுபோலிருந்தது. என்ன? எங்கே? என்று தெரியவில்லை —வயிறு வலித்தால் சின்னப்பிள்ளை காலைக் காட்டுமே அப்படி! குண்டூசியோ என்று சட்டைப் பட்டியைத் தொட்டுப் பார்த்தேன்! ஏனெ னில் எனக்கு மட்டுமல்ல, எல்லாருக்குமே அது கைவாக்கில் வைக்கும் 'பின்குஷன்', அதில் நேற்று நான் குத்திவைத்த குண்டூசி குத்தியிருக்குமோ என்று சந்தேகப்பட்டேன். ஆனுல், அது குண்டும் கூருமாய் என்னைக் கூர்ந்து, பரிகாச மாய்ப் பார்த்தது. இந்த ஜாதிக்கு ஒருநாளும் விடியாது என்று தோன்றியது.

இப்போது இருபது வருஷமாகிறது. நேற்று நடந்தது போலிருக்கிறது. சமீப சம்பவங்கள்பற்றி நமது முதல் மந்திரி

முதல் முதலில் ஒரு விளக்கங் கொடுத்தார், அதில் அவர் சொன்னார்: "சென்ற 20 ஆண்டுகளாகவே மறவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் மனக்கசப்பு இருந்து வருகிறது. இது இவ்வருஷம் மார்ச்சு மாதத்தில் நடந்த தேர்தலினாலும் பின்னர் நடந்த உப-தேர்தலினாலும் வலுவடைந்தது,"

மறுதினமே தேவர், முதன் மந்திரியைக்கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் சொன்னார்: "சென்ற 20 ஆண்டுகளாகவே மறவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் மனக்கசப்பு இருப்பதாக ஸ்ரீ காமராஜ் கூறுவது பொய். இதை எந்தச்சர்க்கார் அறிக்கையினாலோ, பத்திரிகைச் செய்தியினாலோ நிரூபிக்க முடியாது.

"இந்தச் சதித்திட்டம் மதுரையிலும் விருதுநகரிலுமுள்ள சிலரால் ரகசியமாய் ஜூலை மாதத்தில் வகுக்கப்பட்டது. ஹரிஜனங்களில் ஒரு பகுதியினருக்குப் பணங் கொடுத்து இந்தக் கலகத்திற்கு ஏற்பாடு செய்துள்ளனர்,"

இவ்விரண்டு மாறுபட்ட கருத்துள்ள அறிக்கைகளைப் படித்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது. தினக்குறிப்பு என்பது யராவது ஒருவருடைய வாழ்க்கையில் அன்றாடம் மலர்ந்த பூக்களின் சாரத்தை வடித்தெடுத்துவைத்த அத்தர்ப்புட்டியல்ல என்று தெரிந்தது.

முத்துராமலிங்கத் தேவரின் தினக்குறிப்பு ஒன்று என்னிடம் இருந்தது. அது அவருடைய வாழ்க்கையில் மலர்ந்த பூக்களின் சாரத்தை வடித்தெடுத்து வைத்த அத்தர்ப்புட்டியல்ல - தீர்ப்பு. ராவ்சாகிப் எம். ஏ. குத்தாலலிங்கம்பிள்ளை எழுதியது. ஏறக்குறைய ஏழரை வருஷங்கள், தேவர் என்னென்ன கொடுமைகளை எல்லாம் செய்தார் என்று அதில் திரட்டிவைக்கப்பட்டிருக்கிறது: 1937-ல் நடந்த தேர்தலில் தேவர் காங்கிரஸ் டிக்கெட்டில் நின்றாரல்லவா? அதில் வென்றாரல்லவா? வேறென்ன கேடு வந்தது? ஹரி

ஜனங்கள் ஓட்டுப்போடாவிட்டால் என்ன கெட்டுப்போய் விட்டது? ஜெயித்த சந்தோஷத்தில் இதையெல்லாம் மனதிற் போட்டுக் கொள்ளலாமா? மறப்பதும் மன்னிப்பதும் மனிதப் பண்பல்லவா?

தீண்டாமை யொழிப்பைக் காங்கிரஸ் ஒரு திட்டமாய் வைத்திருந்தும், வைக்கத்தில் அதற்காக ஒரு பேராட்டத் தையே நடத்தியிருந்தும், பெரியார் ஈவெரா போன்றவர்கள் அதற்காகச் சிறைச்சாலையிலே செக்கிழுத்திருந்தும்,ஹரிஜனங் கள் அப்பேர்ப்பட்ட காங்கிரஸுக்கு விசுவாசமாயிருப்பது ஒரு விஷயம்; விரோதமாயிருப்பது வேறு ஒரு விஷயம். வோட்டுப் போடுவது ஒரு விஷயம்; வோட்டுப் போடாதது வேறொரு விஷயம். இரண்டையுங் குழப்பிக் குரோதங் கொள்வது தர்மமல்ல. நீண்டகாலமாக ஹிந்துமதம் தனக் குள்ளே சிலரைத் தள்ளிவைத்ததற்குக் காங்கிரஸ் ஒரு பரி காரந் தேடுகிறது. அது காங்கிரஸின் கடமை. கடமைக்குக் கூடவா கைக்கூலி? தீண்டாமை தீர்ப்ப தென்பது ஒரு திருத்தமே. அதாவது இந்துமதம் இதுவரை செய்த தவறைத் திருத்துவது. நம் தவறை நாமே திருத்துவதற்காகக் காங் கிரஸ்காரர்கள் வோட்டுக்கேட்ப தென்பது கைக்கூலி கேட் பதைத்தவிர வேறொன்றுமில்லை, இல்லையென்றால் கோபமா? அடிதடியா?

தேவர் இப்படி எண்ணவில்லை. "தாயோழி பள்ளப்பயல் கள், நம்மை மதிக்கவில்லையே? நமக்கு ஓட்டுப் போடவில் லையே?" என்று எண்ணினர். என்ன நெஞ்சு விருய்? மனு ஷன் நினைக்கக்கூடிய நினைப்பா இது? உடனே தன் கை வாணங்களை விட்டு, அந்த அப்பாவிகளைக் கூட்டிவந்து, தன் மைத்துனரான தங்கவேலுத் தேவரின் ஊரான குண்டுகுளத் தில், கட்டி வைத்துப் பொய் நோட்டு எழுதி வாங்க ஏற்பாடு நடந்தது. இது போலீசுக்குத் தெரிந்து சப்-இன்ஸ்பெக்டர்

அந்த இடத்திற்கு விரைந்து சென்று, ஹரிஜனங்களைக் காப் பாற்றினர். 12 பேர்மீது 562-வது செக்ஷன்படி வழக்குத் தொடரப்பட்டு, 11 பேர் மூன்று வருஷ நல்ல நடத்தை ஜாமீன் வாங்கப்பட்டனர். இப்படிக் கோர்ட்டுத் தீர்ப்புக் கூறுகிறது. உங்கள் தீர்ப்பு என்ன ? இருபது வருஷங்களா கவே இச்சச்சரவு இருந்து வருகிறது என்று முதன் மந்திரி சொன்னது சரியா ? இல்லையென்று தேவர் சொன்னது சரியா ? எப்போதும் பொய்யே சொல்லுகிறவர்களுக்கு உண்மை என்பது ஒருபோதும் வாயில் வராது.

நாடார்கள் தூண்டிவிட்டுத்தான், ஹரிஜனங்கள் இப் படி மறவர்களுக்கு விரோதமாய்க் கிளம்பியிருக்கிருர்கள் என்று தேவர் சொல்லுகிருரே அதைப்பற்றியும் ஒரு சிறிது பார்க்கவேண்டும். தேவர் (உ.முத்துராமலிங்கதேவர்) நாடார் விரோதமும், இருபதாண்டு வியாதியே! 1937 எலக்ஷனில் நாடார்கள் காங்கிரஸுக்கு ஓட்டுப்போடவில்லை ; எப்பொழு தும் ஆளுங்கட்சியையே அனுசரித்துப் போகிற அச்சமூகம் அச்சமயம் காங்கிரஸுக்கு ஓட்டுப்போடவில்லை என்பது அப்படியொன்றும் விந்தையல்ல. போட்டிருந்தால் அதுதான் விந்தையா யிருந்திருக்கும். அதைப்பற்றிக் காங்கிரஸ் ஒன்றுங் கவலைப்படவில்லை. ஆனல் தேவர் ரொம்பக் கவலைப்பட் டார். "நாடார்கள் நமக்கு விரோதமாய் ஓட்டுப்போடுவதா?" என்று மீசையை முறுக்கினர் - அப்போது அவருக்கு மீசை இருந்தது. அதைத் தொடர்ந்து கமுதி நாடார்கள் தேவர் சொற்படி, புதிய அரசியல் அமைப்புக்கு எதிராக 1—4—37ல் கடையடைப்புச் செய்யவில்லை. ஏற்கனவே இருந்த விரோ தத்தோடு இந்தக் கோபமுங் கூடிக்கொண்டால் எப்படி யிருக்கும் ?

உடனே தன் கைக்குருவியான சோலைக் குடும்பனை யும் வேறு சிலரையும் ஏவிப் பசும்பொன் பக்கத்தில் நாடார்

கள் செய்திருந்த வெள்ளாமைகளைக் கொள்ளையடிக்கச் சொன்னார். நாடார்கடைகளில் யாரும் சாமான்கள் வாங்கக் கூடாதென்று தடை செய்தார். வாரச்சந்தையில் வாசலுக்கு வாசல் ஆட்களை நிறுத்தித் தன் தடையுத்தரவை அமுல்நடத்தினார். போட்டிக்கடையாக "பாரதமாதா ஸ்டோர்ஸ்" என்று ஒரு பலசரக்கு மளிகையைப் பல பங்குகள் சேர்த்து ஆரம்பித்தார். அது சிலநாட் சென்று மூடப்பட்டு விட்டதென்பதும், பங்குதார்களுக்குப் பணஞ் சேரவில்லை யென்பதும் வேறு விஷயம். ஆனால் தேவர் - நாடார் துவேஷம் இன்று நேற்றுத் தொடங்கியதல்ல. இருபது வருஷங்களாகவும், அறுபது வருஷங்களாகவும் இருந்து வருகிறது என்பதும் அதனாலேதான் அதைத் தேவர் இப்போது இப்படிப் பயன் படுத்துகிறார் என்பதும் தெரிகிறது. இதையும் ஸ்ரீ குத்தாலலிங்கம் பிள்ளையே தம் தீர்ப்பில் கூறுகிறார்.

இவைதவிர வேறு பல விஷயங்களும் அத்தீர்ப்பில் வருகின்றன: எல்லாம் அவர் எப்பேர்ப்பட்டவர் என்று படம் பிடித்துக் காட்டுகின்றன. தன் சொந்தக்காரியான மேலராமநதி கருப்பாயி அம்மாளுக்கு விரோதமாக - அவர் தகப்பனரால் அவ்வம்மாளுக்கு அளிக்கப்பட்ட சொத்தை அபகரிப்பதற்காக அவர் என்ன எல்லாம் தீமைகள் செய்தார் என்பதைக் கூறுவது ஒன்று.

மற்றொன்று தேவர் தம் சொந்தக்காரரான செங்குளம் இராமுத் தேவருக்குப் பரிந்து வந்து புரிந்த பல அக்கிரமங்கள். அதில் ஐயரப்ப நாயக்கர் அகப்பட்டார். நாயக்கர், தேவருக்கு இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுத்தார். அதை வட்டியும் முதலுமாய்க் கேட்டார். முத்துராமலிங்கத்தேவர் குறுக்கிட்டு முதலுக்கு மோசமாய் மத்தியஸ்தம் கூறினார். நாயக்கர் கேட்கவில்லை. அதற்காக அவருக்கிழைப்பட்ட தீமைகளையும் அத்தீர்ப்பே கூறுகிறது.

மூன்றுவது அவர் சொந்த விஷயம். 1928 முதல் தொடர்ந்து தேவர் இராமநாதபுரம் எஸ்டேட்டுக்கு நிலவரி செலுத்தவேயில்லை. வியாஜ்ஜியஞ் செய்து எஸ்டேட் டிக்கிரி வாங்கியது. 1933-ல் சொத்து ஏலத்துக்கு வந்தது. கேட்பாரற்று எஸ்டேட்டே ஏலம் எடுத்தது. "எஸ்டேட் டேயானுலும் என் சொத்தை எப்படி ஏலம் எடுக்கலாம்?" என்று தேவருக்குக் கோபம் வந்தது. உடனே பகிஷ்காரம், பயமுறுத்தல் எல்லாந் தொடர்ந்தன, ரய்யத்துக்கள் எஸ்டேட் டுக்கு மேல் வாரம் தரப்படாது என்ற தடுப்பு, எஸ்டேட் உத்தியோகஸ்தர்கள் வரி வசூலித்தால் தெரியுமா என்ற பய முறுத்தல். தடுத்தலும் பயமுறுத்தலுந்தான் தேவருக்குத் தண்ணீர் பட்டபாடே? எதிர்த்தால் என்னுகும்? கமுதி உதவி தாசில்தார் சிதம்பர முதலியாருக்கு நேர்ந்த கதிதான்.

கமுதி தபாலாபீஸ் எதிரே தாசில்தார் வீட்டுத் திண்ணை யில் தூங்கிய உதவி தாசில்தாரை, யாரோ சிலர் வந்து வலது காலில் வெட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். போலீஸ் எவ்வ ளவோ புலன் விசாரித்தும் குற்றவாளி அகப்படவில்லை. என் ருலும் முத்துராமலிங்கத் தேவர் ஏவுதல் இல்லாமல் இது ஏற்படவில்லையென்று அவர்மீது இ. பி. கோ. 144-வது செக்ஷன்படி ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. போலீஸ் பந்தோபஸ்துடன் வரி வசூலிக்கப்பட்டது. எஸ்டேட் உத் தியோகஸ்தர்கள் பாடும், வரி வசூலுமே இப்படியானுல் சாதாரண ஜனங்களின் பாட்டைக் கேட்கவேண்டுமா ?

நாலாவது செய்கை அபிராமம் இந்து-முஸ்லிம் சச்சரவு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத சம்மந்தமாய் ஏற் பட்ட தகராறல்ல. முஸ்லிம்கள்மீது முத்துராமலிங்கத்தேவர் தம் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக இந்துக்களைத் தூண்டிவிட்டதா லேற்பட்டது. அபிராமம் ஒரு குத்தகைக் கிராமம். இராமநாதபுரம் ராஜாவால் இரு முஸ்லிம் பிரமுகர்

களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. அவர்களுக் குநஷ்டம் உண்டாக்கவேண்டுமென்று தேவர் முன்னூறு, நானூறு ஆட்களை ஏவிக் கண்மாய்த் தண்ணீரைக் காலி செய்தார். அப்போது நஞ்சை நிலத்தில் பயிர்கள் இருந்தது. தோல் விலைக்குப் பசுவை விற்பதுபோல், மீன் பிடிப்பதற்காகப் பயிரைச் சாகடிப்பதான. இந்த நல்ல காரியத்தைத் தானே செய்ததாகத் தேவரே இராமநாதபுரம் சப் கலெக்டர் கே. ஜி. மேனனிடம் ஒப்புக்கொண்டார்.

ஐந்தாவது சம்பவம், 1937 எலக்ஷனுல் ஏற்பட்டது. இராமநாதபுரம் ராஜாவுக்குத் தேர்தல் வேலை செய்த கமுதி உதவி தாசில்தாரான நாகராஜய்யர் இனந்தெரியாத சில காலிகளால் தாக்கப்பட்டார்.

ஆருவது குற்றம் ஆருத பெரிய ரணம். மது மூத்திரம் உள்ளவனுக்கு எந்தப்புண்ணும் சீக்கிரம் ஆருது. முதுகுளத்தூர் மாஜிஸ்ட்ரேட் கொலேயும் சீக்கிரம் மறக்காது. சிம்ம சொப்பனம் போல், எப்போதும் எல்லார் மனதிலும் உறுத்திக்கொண்டே யிருந்தால் மறப்பதெப்படி ? உத்தியோகஸ்தர்கள் அங்கு வரப் பயப்படுகிருர்கள்; வரி வசூலிக்கப் பயப்படுகிருர்கள். வக்கீல்கள் வழக்குரைக்கப் பயப்படுகிருர்கள். ஹெட்மென் ரிப்போர்ட் செய்யப் பயப்படுகிருர்கள். போலீஸ்காரர்கள் கேஸ் நடத்தப் பயப்படுகிருர்கள். சாட்சிகள் உண்மை சொல்லப் பயப்படுகிருர்கள். தேவர்களுக்காகப் பொய் சொல்லத் துணிகிருர்கள். கூண்டேறி அவர்களுக்கு விரோதமாய் ஏதாவது சொல்லி விட்டுக் கீழே இறங்கினுல் கை போகுமோ, கால் போகுமோ அல்லது தலேயே போய்விடுமோ என்று அஞ்சுகின்றனர். எங்கு பார்த்தாலும் எவரைப் பார்த்தாலும் இந்த உணர்ச்சி இருந்தால் எது உருப்படும்? பயந்து சாவதே எல்லாருக்கும் பழக்கமாய்ப் போய் விட்டது.

கோர்ட்டிலேதான் இப்படி என்பதில்லை. கோயில் குளங்களிலும் இதுதான் வழக்கம். மறவர்களுக்கே முதல் மரியாதை கொடுக்கவேண்டும். எல்லாருக்கும் முதலில் தீர்த்தமும் திருநீறும் அவர்களுக்கேதரவேண்டும். இல்லையெனில் யாருஞ் சாமிகும்பிடக் கூடாது. சல்லிபெருத சாம்பலுக்காகச் சந்தி சிரித்த சங்கதிகள் நிறைய உண்டு. கண்மாய்களில் தண்ணீர் பாய்ச்சுவது, மீன் பிடிப்பது, கிணறுகளில் தண்ணீர் எடுப்பது எல்லாவற்றிலும் இவர்களோடு சச்சரவே.

கிராமத் தலையாரிகள் எல்லாரும் இத்தேவாதி தேவர்களே. இவர்களைமட்டும் ஜாதிவெறி விட்டுவிடுமா? அல்லது ஜாதிக்குணம் இவர்களிடம் இல்லாதது போய்விடுமா? சர்க்கார் சிப்பந்திகளா யிருந்தும் அவர்களுக்கு ராஜாங்க விசுவாசம் என்பது இல்லவே இல்லை. ஆகவே அவர்கள் வேலை செய்யாமல் சம்பளம் வாங்கும் ஊழியர்களாகவே யிருக்கிறார்கள் - உண்மைக்கு மாறுகவும் உபயோக மில்லாமலும். சமஸ்தானுதிபதிகளும் ஜமீன்தார்களும்போல் இவர்களும் போகவேண்டியவர்களே.

1938-வது வருஷம் முதுகுளத்தூரில் பிரமநாயகம் பிள்ளை என்பவர் சப்-மாஜிஸ்ட்ரேட்டா யிருந்தார். அபிராமம் முஸ்லிம்கள் வீட்டில் தேவர்கள் கல்லெறிந்தார்கள் என்று ஒரு வழக்கு அவரிடம் வந்தது. மூன்று வருஷம் விசாரணை நடந்தது, முடிவில் 22 பேர்கள் தண்டிக்கப்பட்டனர்.

இந்துக்கள் கட்சிக்குத் தலைமை தாங்கிக் கேஸ் நடத்திய முத்துராமலிங்கத் தேவருக்கு இத்தீர்ப்பு கோபத்தைக் கிளரியது. காட்டு நெருப்பை யாரும் வைக்கவேண்டும் என்பதில்லை-தானுகவே பிடித்துக்கொள்ளும். தீர்ப்பின் மீதிருந்த கோபத்தோடு, தானே நேரில் போய்க்கேட்டும் சப்-மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பு நகல் கொடுக்கவில்லை யென்றுல் மனிதனுக்கு எப்படிவரும்? தயாரிக்கச் சிலநாள் செல்லுமென்று

எப்படிச் சொல்லாம்? சப்-மாஜிஸ்ரேட்டே யானுலும் தேவரிடம் சொல்லக்கூடிய பதிலா இது? "தண்டித்தது மல்லாமல் கண்டிப்பாகவுமா இருக்கிறீர்? பார்க்கிறேன் ஒரு கை!" என்று அரட்டினுர் அவர்.

இதை பிரமநாயகம் பிள்ளையே கே. ஜி. மேனனிடம் கூறினுர். கே. ஜி. மேனன், அப்போது இராமநாதபுரம் ஜாயிண்ட் மாஜிஸ்ட்ரேட்டா யிருந்தார். "ரிவால்வர் வைத்துக்கொண்டு எச்சரிக்கையாயிருங்கள்!" என்று அவர் சொன்னுர். ஆனுல் அந்தோ! அந்த சப் - மாஜிஸ்ட்ரேட் அடுத்த வாரமே கொலை செய்யப்பட்டார். என்ன கொடுமை இது! தீர்ப்பளித்தவரையே தீர்த்துக்கட்டுவதா? தீர்ப்பு தப்பா? தேவமார் கல்லெறியவில்லையா? கேஸ் கற்பனையா? சாட்சிகள் சொன்னதெல்லாமே பொய்யா? அப்பீல்தான் உருப்பட்டதா? 11 பேர் தண்டிக்கப்படவில்லையா?

இந்தச் சமயத்திலேதான் தேவர் தம் இருப்பிடத்தை மதுரைக்கு மாற்றிக்கொண்டார். மனிதனுக, மதுரை நல்ல இடம். சொக்கன் காசு அக்கரைப்படாதானுலும், சீக்கிரத்தில் அது யாரையும் உயர்த்திவிடும். தேவருக்குக் கிராக்கி காத்திருந்தது. ஆலைத் தொழிலாளர் தலைவரானுர். 'ஆச்சா போச்சா' என்று பேசினுர். வேலை நிறுத்தஞ் செய்யச் சொன்னுர். வழிப்பறி செய்யவுந் தூண்டினுர், மகாலெட்சுமி மில்லும், நிட்டிங் பாக்டரியும் அமர்க்கள மாயின. பாட்டாளிகள் பண்ணின அட்டகாசம் கொஞ்சமல்ல. கொலை வெறியிலே அவர்கள் கூத்தாடினர்.

"எந்தப் புரட்சியும் கண்ணீரினுல் நடப்பதில்லை. புரட்சிக்குப் பிடித்தமான ஒரே நைவேத்தியம் தொண்டர்களின் இரத்தம்." இதை முத்துராமலிங்கத் தேவர் மாற்றிச் சொன்னுர், "மில் முதலாளிகளின் இரத்தம்" என்ருர். 1939-ம் வருஷம் ஜுன் மாதம் 19உ மதுரை மணல் மேட்டுக்

கூட்டத்திற் கூறினர். "உத்தரவு வரும், இரகசியமாக வரும். எந்த ஜாமத்திலும் வரும். ஜாக்கிரதையாக யிருந்து நிறைவேற்றுங்கள். இரத்தஞ் சிந்துகிறோமே என்று சித்திக் காதீர்! இரத்தஞ் சிந்துவது வெற்றிக்கு !" என்றார். உடனே தொழிலாளிகள் முதலாளிகளைக் கண்டபடி திட்டி, காரை மறித்து, கல்லைவிட்டெறிந்து, காயப்படுத்தினர்.

சீட்டி ஆக்ட்டுக்கும் தேவருக்குமுள்ள சம்மந்தம் தெரியுமா ? அதுவும் நேதாஜிக்கும் அவருக்குமுள்ள உறவு போன்றதே. இறந்தவரைப் பிழைக்கவைக்கும் மந்திரம் தேவரிடம் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது, ஆனல் நேதாஜிக்காக நேற்றுவரை, மதுரையிலிருந்து மாம் பழக்கூடை சுமந்து, மண்டை பொட்டலானவர்களையும், தேவர் காட்டிய யாரோ ஒரு மண்டை பொட்டலான மனிதரை, டில்லியிலோ - அதற்கப்பாலோ பார்த்துவிட்டு இவர்தான் நேதாஜி என்று நம்பிக்கொண்டிருக்கிற மைனர் களையும் கேட்டால் தெரியும், நேதாஜி இருக்கிருரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இருக்கிருர் என்பவர்கள் எதற்காகவோ இப்படி இட்டுக்கட்டிப் பொய் யையே முழுக்க முழுக்கப் பேசுகிருர்கள் என்றும், இல்லை யென்பவர்கள் உண்மையை வருத்தத்தோடு சொல்லுகிருர் கள் என்றும் நான் நம்புகிறேன். பச்சையாகவும் பயப்படா மாலும் பொய் சொல்வதற்கு "நேதாஜி இருக்கிருரென்று தேவர் கூறுவதுபோல்" என்று ஒரு உதாரணச் சொல்லையே உண்டாக்கலாமா என்று நான் நினைக்கின்றேன்.

நேதாஜி இருக்கிருர், இந்தா வருகிருர் அந்தா வருகிருர் என்று நம்மைக் காலமெல்லாம் ஏய்ப்பது போலவே, சீட்டி ஆக்டையும் நான்தான் எடுத்தேன் என்று கூசாமல் கூறுகிருர். ஆமாம் இருக்கிறேன் என்று ஓடோடிவர நேதாஜி இல்லை. ஆனல் அந்த ஆக்டை யெடுக்க முயன்ற வர்கள், இருக்கிறோம் என்று ஓடிவரத் தயாராய் உயிரோ

டிருக்கிருர்கள். அவர்களே சிதம்பர பாரதி எம். எல். ஏ., 'திருநாடு' ஆசிரியர் சிவஞண்டித் தேவர், "தினகரன்" ஆசிரியர் தினகரன். முக்குலத்தோர் சங்கமும், "மூவேந்தர்" பத்திரிகையும் அப்போது அவர்களிட மிருந்தன.

1933 முடிவில் முதுகுளத்தூர் தாலுகாவில் ஆப்பனுடு கொண்டையங்கோட்டை மறவர் சிலரைக் குற்ற பரம்பரை ஜாபிதாவிற் சேர்த்துப் பதிவு செய்யுமாறு ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதை அறிவிக்கும் நோட்டீசைச் சார்வு செய்யவே சில காலம் பிடித்தது. வாங்க வேண்டாமென்று தேவர் சொன்னுர். வாங்கமாட்டோம் என்று அவர்கள் மறுத்தார்கள்,

பிறமலேக் கள்ளர்களேயும் அவர் பிரயோசனப்படுத்திஞர். 1939 பிப்ரவரி மத்தியில் இரண்டாயிரம் கள்ளர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் அவர் பேசிஞர்: " தூக்கு மேடைக்கு மஞ்சாத நீங்கள், வீரப்பரம்பரையில் வந்தவர்கள். குற்றபரம்பரைச் சட்டத்திற் குட்பட்டுப் போலீசாரால் நாயிலுங் கேடாய் நடத்தப்பட நீங்களென்ன கோழைகளா ? கையாலாகாதவர்களா ?"

இப்படிச் சொன்னுல் அவர்களுக்கு எப்படி இருக்கும்? உடனே உசிலம்பட்டியில் முதலாவது கள்ளர் இளேஞர் மகாநாட்டைக் கூட்டிஞர்கள். முத்துராமலிங்கத் தேவரைத் தலைமை தாங்கும்படி கேட்டார்கள். "குற்றபரம்பரைச் சட்டமானது, கொள்ளேயர்களான வெள்ளேயர்களால், நம்முடைய போர் ஆர்வத்தை அடக்கக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வழி. அதற்கு நீங்கள் அடிமையாகக் கூடாது," என்று உரை நிகழ்த்திஞர்.

பேச்சிஞல் என்னுகும்? சட்டம் போய் விடுமா? ஏச்சிஞலேதான் என்னுகும்? சட்டம் எடுபட்டு விடுமா? உணர்ச்சியைத் தூண்டவேண்டுமாஞல், பேச்சும் ஏச்சும் பயன்

படலாம். எந்தச் சட்டமும் வெறும் பேச்சினுல் எடுபடாது தானுகவும் போய் விடாது. குற்றபரம்பரைச் சட்டத்தை எடுப்பதற்கான வழிகள் இரண்டு: ஒன்று அதன் முகவுரை (Preamlle)யில் உள்ளபடி தண்டிக்கும் நோக்கமில்லாமல் திருத்தும் நோக்கத்தோடு செயல்படுவது. இரண்டு அந்த ஜனங்கள் தாங்களாகவே திருந்துவது.

இவ்விரண்டு வழிகளேயும் விட்டு, 'ஆய், ஊய்' என்று சும்மா அரற்றினுற் சட்டம் அகன்றுவிடுமா? மறவர்களேயும் கள்ளர்களேயும் உணர்ச்சிவசப்படுத்தியதற்குமேல், தேவர் முயற்சி சிட்டி ஆக்டை எடுக்கச் சிறிதும் பயன்படவில்லே. 1932 முதல் 39 வரை முடிந்த ஏழரை வருஷங்கள் நமக்கு ஏழரைநாட்டுச் சனியா யிருந்தது. அரசாங்கம் அவர் மீது ஜாமீன் வழக்குத் தொடர்ந்தது. தேவரை அவர் மூப்பில் விட்டால், தானும் பல குற்றங்களேச் செய்து, தன் சமூகத்தையும் பல குற்றங்கள் செய்யத் தூண்டிவிடுவார் எனத் தீர்மானித்து, கிரிமினல் புரோஸீஸர் கோடு 118-வது பிரிவின் படி அவரிடம் ரு 3000 த்திற்கும், மற்றுமிருவர்களிடம் அதே தொகைகளுக்கும் ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுக்கும்படி மதுரை அடிஷனல் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ எம். ஏ. குத்தாலலிங்கம் பிள்ளே தீர்ப்புக் கூறினுர்.

அதன் மீது ஜில்லா செஷன்ஸ் கோட்டில் முத்துராமலிங்கத்தேவர் அப்பில் செய்தார். "ஒரு வருஷம் கேட்டது குறைவு, மூன்று வருஷம் ஜாமீன் கேட்டிருக்கலாம். கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பை உறுதி செய்கிறேன்" என்று ஜில்லா நீதிபதி தீர்ப்பளித்தார். ஹைகோர்ட்டிலும் அதே உறுதியா யிற்று. நாற்பதில் நடந்தது இது.

ராஜாஜி முதல் மந்திரியா யிருந்தார்-சென்னேயில். முத்துராமலிங்கத்தேவர் காங்கிரஸில் இருந்தார். நாலணுக் கொடுத்துக் காங்கிரஸில் சேர்ந்த எல்லாரும் நல்லவர் என்று

சொல்லமுடியுமா? கற்பகதருவைச் சார்ந்த காகமும் பொன்னிற மாகும் என்பதுபோல காங்கிரஸில் சேர்ந்த கெட்டவனும் நல்லவனுவான் என்று நாடு நம்பி யிருந்தாலும் தேவரிடம் அது பலிக்கவில்லை. அவர் மிகுந்த அனுபவசாலி-பல விஷயங்களிற் பழமுந் தின்று கொட்டையும் போட்டவர்.

அவருக்கு ஆச்சாரியா ரென்ருல் பிடிக்காது. ஆச்சாரியாருக்குத் தேவர் என்ருல் பிடிக்காது. அது அவர்கள் ஒருவர் முகத்தில் ஒருவர் விழித்த வேளையா யிருக்கலாம். "இந்த உச்சிக்குடுமி ஆச்சாரி என்னையா ஜாமீன் கேட்கிருன்? பார்க்கிறேன் ஒரு கை!" என்று அடம் பிடித்தார் முத்துராமலிங்கத்தேவர். திருப்பரங்குன்றம் மகாநாட்டில் அவர் அப்படியே செய்து முடித்தார். தேவர் காங்கிரஸில் இருந்தவரை, ராஜாஜி அரசியலில் தலை தூக்கவே முடியவில்லை.

தேவர் ஒரு கல்லுருளை. ரோட்டில் உபயோகிக்கும் கல்லுருளை எதிர்ப்படும், எல்லாக் கற்களையும் அமுக்கி ஆழ்த்தும். தேவர் தமக்கு எதிராக வருபவர்கள் எல்லாரையும் அடக்கி ஆள்வார். ஆனுல் ரெம்பக் கமுக்கமாய்ச் செய்வார். சாக்ஷியிராது; சட்டமும் வராது.

"முத்துராமலிங்கத் தேவர் சொல்லை மீறுகிறவர்கள் அவரிடமிருந்து வரும் ஆபத்திலிருந்து தப்பிக்கமுடியாது. எவ்வளவு எச்சரிக்கையா யிருந்தாலும், போலீஸ் பந்தோபஸ்துக் கிடைப்பதற்குள்ளாக அபாயம் வந்து விடும். சாவைப் போன்ற திருடன் உலகில் ஒன்றுமே இல்லை. அது எந்த நேரத்தில் வந்து தன் வேலையை முடித்துக்கொள்ளுமென்று சொல்ல முடியாது. அவர் அவ்வளவு பயங்கரவாதி. அவர் காலாலிட்ட வேலையைத் தலையாற் செய்யும் ஆப்பநாடு கொண்டையங்கோட்டை மறவர்கள் மிகப்பெரிய பயங்கரவாதிகள்" என்று அத்தீர்ப்பு முத்திரையிட்டு முடிவு செய்கிறது. ஏழரை வருஷம் இப்படி முடிந்தது. அப்புறம்?

வோட்டு அல்லது வேட்டு.

"...............சொல் மருமத்தே பாய்வதன்றோ?
கெட்டார்தம் வாயில் எளிதே கிளைத்து விடும்;
பட்டார்தம் நெஞ்சில் பலநாள் அகலாது
வெந்நரகு சேர்த்துவிடும் வித்தை தடுத்துவிடும்"

——மகாகவி

இரண்டாவது உலக மகா யுத்தம் வந்தது. இரண்டாவது ஏழரைஆண்டுச் சனி கழிந்தது. மாகாண சுயாட்சிக்கும் பூரண சுயராஜ்யத்திற்கும் ஊடே நடந்த அந்த யுத்தம், பூகோளப் படத்தையே அழித்து எழுதியது. இந்தியாவின் தலைவிதியையும் அழித்தெழுதியது. "எங்களைக் கேட்காமல் எப்படி இந்தியாவை இந்த யுத்தத்தில் இழுக்கலாம்? வெள்ளை ராஜாக்களின்கீழ் நாங்கள் மந்திரிகளா யிருக்கவும் மாட்டோம், இந்த யுத்தத்தில் ஒத்துழைக்கவும் மாட்டோம்" என்று காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமாச் செய்து விட்டு வெளியேறினார்கள். ஆனால் அரசாங்கம் அவர்களைப் பிடித்து ஜெயிலுக்குள்ளே தள்ளியது. யுத்தம் முடிந்துதான் அவர்கள் வெளியில் வந்தார்கள்.

அப்புறமொரு தேர்தல் வந்தது. அதிலும் தேவரே, காங்கிரஸ் டிக்கட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் சட்டசபைக் கூட்டங்களுக்குப் போவதில்லை. "ஏன்?" என்று கேட்டால் "என்ன காங்கிரஸ்? என்ன நிர்வாகம்?" என்று சொல்லத் தொடங்கினார். 1947-ல் சுதந்திரம் வந்தபிறகு "என்ன சுதந்திரம் இது? என்ன நிர்வாகம்? உண்மையான சுதந்திரம் இன்னும் வரவில்லையே" என்றார். ஆனால் உள்ளுக்

குள்ளே "எனக்கேன் இக்காங்கிரஸ், ஒரு மந்திரி பதவி கொடுக்கவில்லை? கொடுத்தால் இப்படிக் கூறுவேனு"? என்று தலையைச் சொரியலானுர், புளிச்சிகுளம் ஆலமரத்தடியில், விபூதியும் உத்திராட்சமு மணிந்து துறவு நிலையடைந்தார்-சம்பளத்தை மாதாமாதம் வாங்கிக்கொண்டு சட்டசபைக் கூட்டங்களுக்குப் போகாத் துறவு.

அப்போதுதான் சொர்க்கலோகத்திலிருந்து சாக்ஷாத் நேதாஜி, தேவரவர்களின் மூளையில், பாரச்சூட்டில் வந்து முழுசாய் இறங்கினுர். அன்று முதல் இன்றுவரை நேதாஜி தேவர் வீட்டில் இலைபோட்டுச் சாப்பிடுகிருர். மதுரையிலிருந்து மாம்பழக்கூடை சுமந்து சுமந்து சிலருக்கு மண்டையே பொட்டலாய்ப் போய்விட்டது.

"நேதாஜி நேபாளத்திலிருக்கிருர். அவரிடம் ஒரு பெரிய ஆசியச் சேனையிருக்கிறது. விமானங்கள், டாங்குகள், அணுகுண்டுகள் எல்லாம் இருக்கின்றன. எந்த நேரத்திலும் அந்தச் சேனை இந்தியாவில் வந்து இறங்கும். செங்கோட்டையில் குண்டு போடும். காங்கிரஸ் அரசாங்கம் அழிந்துவிடும். நேதாஜியும் நானும் இந்தியாவை ஆளுவோம்" என்று சொன்னுர். அப்படிச் சொல்லிச் சொல்லித் தேவருக்கு நாக்கே தேய்ந்துவிட்டது. வைத்த கெடுவுக்குங் கணக்கில்லை; ஒரு கெடுவிலும் நேதாஜி வரவுமில்லை. "இந்த வருஷம் கந்த ஷஷ்டியில் கட்டாயம் வருவார்" என்று சொன்னுர், கொடுமளூரில் குமரன் சந்நிதியில் சத்தியமாய். ஆனுல் அந்தக் கந்தஷஷ்டி வந்து போய்விட்டது. நேதாஜியோ வந்து போகவில்லை. ஒவ்வொரு வருஷமுந்தான் கந்தஷஷ்டி வருவதும் போவதுமா யிருக்கிறது. ஆனுல் இறந்தவர் எவரும் எந்த வருஷமும் வந்தார்கள் என்று வரலாறு இல்லை. நேதாஜி வந்து சர்க்காரைக் கைப்பற்றவில்லை. ஆனுல் சர்க்காரோ தேவரைக் கைப்பற்றிச் சிறைச்சாலையில் போட்டிருக்கிறது.

அதே கொடுமளூரில் அதே குமரன் சந்நிதியில்அப்படியே சத்தியமாய், தேவர் இன்னென்றும் சொன்னுர், அது முந்தி

யதைவிட மிகப் பெரிய திடுக்கிடுஞ் செய்தி. நான்கூட அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டேன். ஒரு பிராயத்தைத் தாண்டியவர்களுக்குச் சபலம் தட்டுமே, அப்படி ஏதாவது இவருக்குந் தட்டியிருக்குமோ என்று சந்தேகப்பட்டேன். கிழவனுக்குஞ் சிலசமயம் இளமை திரும்புமே- ஈவேராவுக்குத் திரும்பியதுபோல் அப்படி யொருகால் தேவருக்கும் திரும்பியிருக்குமோ என நினைத்தேன். அதாவது “இந்த வருஷ கந்தஷஷ்டியில் நான் கல்யாணஞ் செய்துகொள்ளப் போகிறேன்” என்றார்.

இது எனக்கு இன்னொரு விதத்தில் திருப்தி யளித்தது. ஒண்டிக்கட்டைகள் கால்கட்டை விழுந்ததும் ஒழுங்காய் நடப்பார்கள், தேவர், திருமணஞ் செய்துகொண்டால், அவர் வாழ்க்கையில் எதிர்பாராத ஒரு திருப்பம் ஏற்படலாம். ஆனால் காமராஜ் அதைக் கெடுத்து விட்டார்-தேவரைக் கைது செய்ததால். நேதாஜி வருகையும் போய்விட்டது; தேவர் வதுவையும் போய்விட்டது.

அரசியலில் தேவர் ஒரு முழு நேர ஊழியர் என்பது சரி. ஆனால் அதைக் கைக்குவந்தபடி செய்யலாமா? வாய்க்கு வந்தபடி பேசலாமா? இருபத்தைந்து வருஷத்து அரசியல் வாழ்க்கையில் அவர் எழுபத்தைந்து வேஷங்கள் போட்டிருக்கிறார். ஆனால் ஒரு வேஷமும் பொருத்தமாயில்லை. “மதம் பெரிதா? மனிதன்பெரியவனா?” என்றால் “இந்துமதம் என் உயிர். முருகன் என்தெய்வம்” என்கிறார். ஆனால் அந்தத் தெய்வத்திற்கும் இவர் செய்வதற்கும் சம்மந்தமேயில்லை. சநாதனஹிந்துவான காந்திஜியை, ஹிந்துமத விரோதி என்கிறார். எந்த ஹிந்து காந்தியைக் கொன்றானோ, அந்த ஹிந்து சபைத்தலைவரான கோல்வால்கருக்குப் பணமுடிப்புக் கொடுக்கப்பட்டபோது “காந்தி இந்துமதத் துரோகி, ஆதலால் நான் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன்” என்றார்.

கசந்துபோன காங்கிரஸ்பக்தி, காந்தியைக்கூடக் 'கன்னு பின்னு' என்று பேசச் சொல்லுகிறது. நேரு எந்த மூலே? காமராஜ் எம்மாத்திரம்? தேவர் வணங்கும் நேதாஜியே, கடைசிவரை காந்திபக்தராகவே யிருந்தார் என்பது தேவருக்குத் தெரியாத தல்லவே? தாண்டியில் காந்தி எடுத்த ஒருபிடி உப்பு உலகத்தையே உலுக்கிவிட்டது. ஆனுல் இந்த மனிதன் உதிரத்தை அது ஒருநாளும் உலுக்கவில்லே. அதனுலேதான் அவர் காந்திஜியைத் துரோகி என்று துணிந்து சொல்கிருர்.

கோயிலிலே தெய்வம் இருக்கிறது என்ருல் பையன்கள் நம்புவதில்லே. குட்டிச்சுவற்றிலே பேய் இருக்கிறது என்ருல் ஒருபையனும் பயப்படாம லிருப்பதில்லே. நல்லதை நம்பாத உலகத்தில் கெட்டதற்குக் கிரீடஞ் சூட்டுங் காலம் இது. கீர்த்தியைச் சம்பாதிக்கத்தேவர் எல்லாரையுந் திட்டு வார்; என்னமுஞ் செய்வார். இந்து மதம் இந்த யுகத்தில் இல்லாமலே போய்விடும்போலவும் அதைப் பிடித்து நிறுத்தத் தேவர் தேவை என்பது போலவும் சிலர் எண்ணுகிருர்கள். தார்மீகத்தின்மீது ஸ்தாபிக்கப்பட்ட மதத்தைத் தடிக்கம்பினுல் காக்கமுடியாது. இந்துமதம் இப்போது அந்தணர் வசம் இருப்பதுபோலவும், அதை அழிக்கச் சிலர் முயற்சிப்பதுபோலவும் அ ர சா ங் க ம் அதைப்பார்த்துக் கொண்டிருப்பதுபோலவும் சொல்லப்படுகிறது. தேவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிருர். அதேசமயம் தேவரும் பயன்படுத்திக் கொள்ளப்படுகிருர். இந்துமதத்தைக் காப்பதென்பதற்கு ஹரிஜனங்களே அழிப்பது என்று அர்த்தமில்லே. அதற்குத் தேவரைப் போன்ற ஆள் வேண்டுமென்ற அவசியமு மில்லே.

இதற்கு ஒரு உதாரணஞ் சொல்லுகிறேன்: பாரதத்தில் துரோண பருவம் ஒரு முக்கியமான பாகம். அந்தண

சிரோண்மணியும் ஆச்சாரியாருமான துரோணர் அதில் தம் பாகத்தைத் திறமையாக நடித்திருக்கிருர்: தமது கவசத்தைத்தானே யணிந்து அருச்சுனனோடு போர் புரியத் துரியோதனனை அனுப்பினுர். அந்தக் கவசம் அதிக மந்திர சக்தி வாய்ந்தது. எந்தப் பாணமும் அதை ஊடுறுவாது. அபிமந்திரித்து எத்தனையோ அஸ்திரங்களைத் துரியோதனன் மீது அருச்சுனன் பிரயோகித்தும், அவனை ஒன்றுஞ் செய்யவில்லை. கூர் மழுங்கிப் பாணங்களெல்லாம் கீழே விழுவது கண்டு கிருஷ்ணனே திகைக்கிருன்.

அப்பேர்ப்பட்ட கவசத்தை அணிந்து முத்துராமலிங்கத் தேவரைக் காமராஜ் மீது அநேகர் ஏவிவிட்டிருக்கிருர்கள். தேவர் தம் ஆட்களை 'சூ' கொட்டுகிருர். ஆச்சாரியாருடைய மந்திரிசபை இருதரங் கவிழ்ந்தப்புறம், காமராஜ் மந்திரி சபையைக் காலைவாறிவிட, கட்டுப்பாடாக ஒரு கூட்டம் தயாராகிறது. மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்கும் மதத்தைக் காப்பதற்கும் என்ன சம்மந்தம்? அரசியல் பண்ண, மதப் போர்வை மூடிக்கொள்ளக் கூடியதல்ல. மனிதனிடமுள்ள குறைகளை மறைக்க, மதம் ஒரு போர்வையா யிருக்கக் கூடாது: தடிமனுன துப்பட்டியைத் தலைகால் தெரியாமல் மூடிக்கொண்டாலும் வெளியில் அடிக்கும் குளிர் இல்லாமலா போய்விடும்? தலைவர்கள் கமுக்கமாய் மூடி மறைத்தாலும் குறைகள் தமுக்கடிக்கப்படாமல் இருப்பதில்லை. தேவர் தமுக்கு 'தாம் தூம்' என்று முழங்கிற்று. எலக்ஷன் நேரங்களில் இடிமுழக்கமோ என்று தோன்றும். மற்ற நேரங்களில் ரணபேரிகையா யிருக்கும்.

1947 தேர்தலுக்குப் பின்னர் நடந்த சட்டசபைக் கூட்டங்களுக்குத் தேவர் போகவே யில்லை. ஏன் என்று யாரும் கேட்கவுமில்லை. கோபித்துக் கொள்ளுவாரென்று வாக்காளர்கள் வாயைப் பொத்திக்கொண்டு இருந்துவிட்டார்கள்.

வீடு தேடிச் சுளைசுளையாய் வரும் சம்பளம் இருக்கிறதே. அதிலுள்ள ஒவ்வொரு சல்லியிலும் தோய்க்கப்பட்டிருக்கும் மனித ரத்தம். முப்பத்திரண்டரைக் கிராமத்து முதலாளியின் ரூபாயிலுள்ள ரத்தத்தைவிட மிக அதிகமானதும் அதிகச் சூடானதும் என்பது அவருக்குத் தெரியாது.

கமுதி ஸ்ரீ சௌந்தரபாண்டியன், ஸ்ரீ ஆதிசிவம் பிள்ளை, கூடக்குளம் ஸ்ரீ சுப்பையாபிள்ளை, ஸ்ரீ தினகரன் ஆகியோர் வந்து சொன்னப்புறந்தான் சர்க்காருக்குத் தெரிந்து ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரைச் சட்டசபை அங்கத்தினர் பதவியிலிருந்து விலக்கிற்று. தொடர்ந்து நடந்த உப-தேர் தலில், தேவர் போட்டியிடவில்லை. ஸ்ரீ ஷண்முகசுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டார்; சிலகாலம் சட்டசபை மெம்பரா யிருந்தார். ஆனால் அநேக நன்மைகளைச் செய்தார். இராம நாதபுரம் ஜில்லா நீர்ப்பாசனக் கமிட்டி யொன்று நிறுவி. அதன் தலைவராயிருந்தார். நான் காரியதரிசியா யிருந்தேன், தூர்ந்துபோன பல கால்வாய்களைக் கண்டுபிடித்து ஒவ் வொன்றுக்கும் ஒவ்வொரு கமிட்டி யேற்படுத்தி வைகை யுடனும் குண்டாற்றுடனும் தொடர்பு வைக்க வாய்ப்பிருக் கிறதா என்று ஆராயப்பட்டது. ஆயக்கட்டுகளும் கணக் கிடப்பட்டன. நாராயணக் காவேரி அவற்றில் ஒன்று. அது திருச்சுழியில் தொடங்கிச் சாயல்குடியில் முடிகிறது. 140 கண்மாய்களுக்குப் பாய்கிறது. திட்டமிட்டு வெட்டினால் அது ஒன்றே அத்தாலுகாவைத் தற்காலிகமாய்த் தண்ணீர் வசதி யுடையதாக்கும். அதிர்ஷ்டங்கெட்ட முதுகுளத்தூர் அவரை மறுபடியுந் தேர்ந்தெடுக்கத் தவறிவிட்டது. மாடு மேய்ந்த பக்கமே மேயும்; மழை பேய்ந்த பக்கமே பேயும்; மனிதன் சாய்ந்த பக்கமே சாய்வான் என்பது பொய்யல்ல. நம்நாட்டு மக்களுக்குக் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் ளத் தெரியவில்லை.

1952-ம் ஆண்டு பிறந்தது; எலக்ஷன் வந்தது. நாடு சுதந்திரம் பெற்றபின் வந்த முதல் தேர்தல் இது. இருபத்தொரு வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லோருக்கும், ஓட்டுரிமை கிடைத்தது. படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும், பணக்காரனுக்கும் பரம ஏழைக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும் அனைவருக்கும் தங்கள் பிரிதிநிதியைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் வாய்ப்பும் பொறுப்பும் வந்தது.

முத்துராமலிங்கத் தேவர் ஒரு கட்சியில் நின்றார். அது ஒரு உபயோகங்கெட்ட கட்சி; உருப்படாக்கட்சி. அதில் அவரைத்தவிர வேறு யாரும் அங்கத்தினரில்லை. தேவைப்படும் போது சிலரைச் சேர்த்துக் கொள்வார். அவர்கள் அனைவரும் பார்வாடு பிளாக் கட்சி என்பார் - ஏழுலட்சம்பேர் இருப்பதுபோல். ஆனால் அவர்களில் ஒருவருக்காவது கட்சி என்றால் என்ன என்றே தெரிந்திராது ஒரு மரம் தோப்பாகுமா? ஆனாலும் அவர்கள் ஒருக்காலும் எந்தக் கட்சியிலும் இருந்திருக்கமாட்டார்கள். தப்பித்தவறி யிருந்திருந்தால் அது ஒரு தரங்கெட்ட கட்சியாகவே யிருக்கவேண்டும். அதற்கும் அவர்கள் முழுக்குப்போட்டுவிட்டுவந்திருக்கவேண்டும். பேர் முன்னேற்றக் கட்சி. யாரையும் அது முன்னேற்றியதில்லை-ஜாதிஜனம் யாரையுமே, அது முன்னுக்குக் கொண்டு வரவில்லை. தானும் முன்னேறாமல் பிறரையும் முன்னேற விடாமல் தடுப்பதே அதன் சுபாவம். தேர்தல் வரும்போது போர்டு போட்டுக்கொண்டு பார்வர்டுபிளாக் தோன்றும். அப்புறம் அது விளக்கு வைத்துக்கொண்டு தேடினாலும் அகப்படாது. அப்பேர்ப்பட்ட கட்சிக்கு வோட்டுப் போட்டால் வாக்காளர்கள் என்ன நன்மை யடைய முடியும் ?

இந்தியக் குடியரசின் முதலாவது தேர்தலில்வந்து நிற்கும்போதே தேவர், அக் குடியரசைக் கொண்டுவந்த காங்கிரசையும் அதன் தலைவர்களையுந் திட்டினார்.

வோட்டு அல்லது வேட்டு என்று வாக்காளர்களைப் பயமுறுத்தினார். இதன் அர்த்தமென்ன ? "நான் உங்களுக்கு ஒரு நன்மையுஞ் செய்யவில்லை யென்றாலும் வாக்காளர்களாகிய நீங்கள் உங்கள், வோட்டுகளை எனக்கே போடவேண்டும். இல்லையானால் உங்களை நான் வெட்டுவேன், குத்துவேன், தீங்கு செய்வேன்" என்றுதானே அர்த்தம்? அவர் சமூகத்தார் அல்லது அவரைப் பின்பற்றுகிறவர்கள். மேற்சொன்ன தீமைகளைச் செய்கிறவர்கள் என்பதுதான் தெரிந்த விஷயமே ! அதற்குப் பயந்து இதர சமூகத்து வோட்டர்கள் அவருக்கே வோட்டளித்தார்கள். முதுகுளத்தூர் தொகுதியில் முத்துராமலிங்கத் தேவரை யாரும் தேர்தலில் தோற்கடிக்க முடியாதென்றால் இப்போது தெரிகிறதா இரகசியம்?

1957-மார்ச்சில் நடந்த பொதுத் தேர்தலிலும், ஜூலையில் நடந்த உப தேர்தலிலும் மேலே சொன்ன **வோட்டு அல்லது வேட்டு** முறையே முழுக்க முழுக்க முதுகுளத்தூர் தொகுதியில் கையாளப்பட்டது. சுமார் 100 வழக்குகள் மறவர்கள் மீது பதிவு செய்யப்பட்டு முடிந்தும் முடியாமலும் இருக்கின்றன.

தினகரன் பத்திரிகை ஆசிரியரான **தினகரன்** வீட்டில் கல்லெறிந்து சேதம் விளைவிக்கப்பட்டது. முத்துராமலிங்கத் தேவர் ஊரான பசும்பொன் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் முஷ்டைக்குறிச்சியில் தேவருக்குச் சொந்தக்காரர்களான சிலரும் சேர்ந்து மேற்படி குற்றத்தைச் செய்தார்கள். அவர்கள்மீது வழக்குப் பதிவாகிச் சிலர் தண்டிக்கப்பட்டனர். தினகரன் தன் பத்திரிகையில் தேவரைப் பற்றி எழுதியதே அதற்குக் காரணம்.

பத்திரகாளிக்குப் பலி கொடுப்பதற்காகக் காடமங்குளத்தில் ஒன்பது ஹரிஜனங்களைப் பட்டப்பகலில் தேவர்

கள் தூக்கிப் போனார்கள். அதைப்பற்றிச் சட்டசபையில் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை வந்தது. அது இப்போது கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது.

இவ்வாறு எத்தனையோ குற்றங்கள் முதுகுளத்தூர் தொகுதி முழுதிலும் நடந்திருக்கின்றன. "இவ்வளவையும் முத்துராமலிங்கத் தேவரா செய்கிறார்?" என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். இக்கேள்வியே புத்திசாலித்தன மானதல்ல. தலைவர்கள் தங்கள் கையைக் கறையாக்கிக் கொள்ளுவதில்லை. தலைவர்கள் ஏவுவார்கள்; ஆட்கள் செய் வார்கள். தூண்டுதலில்லாமல் எதுவும் நடக்காது. செய்கிற வர்களைவிட ஏவுகிறவர்கள் பெயரே எதிலும் அடிபடும். யுத்தத்தை வெல்கிறவர்களும் கொல்கிறவர்களும் சிப்பாய் களேயானாலும் பெயர் வாங்குகிறவர்கள் சேனாதிபதிகளே. தலைவர்கள் நல்லதும் செய்வார்கள். கெட்டதும் செய்வார் கள். நல்ல பேரையுங் கட்டிக்கொள்வார்கள்; கெட்ட பேரையுங் கட்டிக்கொள்வார்கள். தேவர் கட்டிக்கொண்ட தெல்லாம் கெட்ட பேரே.

தேவருக்குப் பிரியமான பேச்சில் அவர் திட்டாத ஆளே யில்லை. சர்க்காருக்குச் சதா சவால் விட்டுக் கொண்டே யிருப்பார். "என்னை இந்த அரசாங்கம் தொட் டால், என்ன நடக்கும் தெரியுமா?" என்பார். என்ன நடக் கும் என்பதைவிட என்ன நடக்கிறது என்பதுதான் இப் போது தெரிந்துவிட்டதே? ஜெயிலுக்குள்ளே ஸ்ரீ முத்து ராமலிங்கத் தேவர், இரும்புக் கம்பிகளை எண்ணிக்கொண் டிருக்கிறார். சட்டம் யாருக்கும் பயப்படாது. நீதி எல்லார் தலைக்கு மேலும் மயிரிழையில் கட்டித் தொங்கு கிறது. விதி வேலை செய்வதுபோலவே நீதியும் வேலை செய்யும்.

சமாதானமோ? சர்வநாசமோ?

“ ஆரடா கூடிதனே யழித்த கொடும்பாவி?
ஆரந்தப் பேய்க்கையன்?
அற்பக் கொடுங் கழுகோ? வல்லூரோ? விஷப்பாம்போ ?
மனிதனிதைச் செய்வானே?..........................
சாவினைப் பொழிந்தனர், துயரினைத் தூவினர்,
தீமழை பொழியச் செய்தனர் தீயோர் ”

——தூரன்.

பத்திரகாளிக்குப் பலியிடப் பல பள்ளர்களை மறவர்கள் பட்டப்பகலில் பாய்ந்து கொண்டுபோனுர்களல்லவா? அது தான் தெரிந்ததே சென்னை சட்டசபை ஒத்திவைப்பு பிரேரணையினுல்? அது இராமநாதபுரம் மாவட்ட ஹரிஜனங்களைமட்டுமல்ல தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஹரிஜனங்களையுமே உலுக்கி விட்டது. அச்சம் நீங்கி “என்ன கொடுமை இது?” என்று எண்ணலாயினர்.

பண்ணந்தையிலோ அதற்குப் பக்கத்து கிராமத்திலோ பள்ளர்கள் ஒரு கூட்டம் போட்டுப் பேசினர். என்ன பேசினுர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் தென்னை மரத்தில் யாரும் புல்பிடுங்க ஏறமாட்டார்களென்பது மட்டும் திண்ணம். மறவர்களுக்கு என்னென்ன தீங்குகள், எப்படியெப்படிச் செய்யலாம் என்று அவர்கள் ஆலோசித்திருக்க வேண்டும்.

இது தகவல், தேவமார்களுக்குத் தெரிந்ததும் அவர்களும் பண்ணந்தைக்குப் பக்கத்திலுள்ள கீரந்தையிலோ வேறெந்தக் கிராமத்திலோ கூடினுர்கள்.

இப்படி இரு சாராரும் கூடுவதும் கலைவதுமான கண்ணுமூச்சி விளையாடினர். இதனுல் ஒன்றும் நடந்துவிட

வில்லை யானாலும் இருதரப்பிலும் எவ்வளவு படையிருக்கிறது என்பதும், எவ்வளவு பலமிருக்கிறது என்பதும் எவ்வளவு பயமிருக்கிறதென்பதும் தெரிந்தது.

"சே! இவ்வளவு தூரத்திற்கு வளர்ந்து விட்டதா!" என்று தேவர்கள் தலையைச் சொரியலாயினர். திக்குக்குத் திக்குத் தபால் பறந்தது. ஆறு எம்மல்லேக்கள் மதுரையில் கூடினார்கள்; இராமநாதபுரம் கலெக்டரைக் கண்டு முதுகுளத்தூர் தாலுகா வட்டாரத்தில் பயங்கரமான கலவர நிலைமை உருவாகி வருவதாகவும் அதனால் பத்து கிராமவாசிகளான தேவர்கள் பயந்து ஊரைவிட்டு வெளியேறிப் போய் விட்டதாகவும் கூறினார்கள்.

மறு வாரமே-சென்ற செப்டம்பர் 10-ந்தேதி இராமநாதபுரம் கலெக்டர் ஸ்ரீ சி. வி. ஆர். பணிக்கர் ஐ. ஏ. எஸ். முதுகுளத்தூரில் ஒரு சமாதான மகாநாடு கூட்டினார். அதில் போலீஸ் பெரிய அதிகாரிகளும், பாபி கட்சி எம். எல். ஏக்களும். காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளும். ஹரிஜனத் தலைவர்களும் இருந்தனர். பார்லிமெண்ட் மெம்பர் முத்துராமலிங்கத் தேவரும்- இருந்தார். கொலையுண்ட இம்மானுவேல் சேகரனும் இருந்தார்.

கட்சிவாரியாய்க் கலெக்டர் அவர்களோடு கலந்து பேசினார். பகிரங்கமாய் எல்லாருடனும் அவர் பேசும்போது "கட்சி விரோதமாய்க் கூட்டங்கள் கூடிக் கலகங்கள் உண்டு பண்ணுவதால் அமைதி ஏற்படாது, சகஜ நிலைமையை யுண்டாக்கவும் பெரிய காரியங்களைச் சாதிக்கவும், சமாதானமே சரியான வழி" என்று சொன்னார். கூட்டறிக்கை விடுப்பதென்று யோசனை கூறப்பட்டது. தேவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஹரிஜன சார்பில் இம்மானுவேலும், காங்கிரஸ் சார்பில் நாடார்களும், கூட்டறிக்கையில் கையொப்ப மிடுவதை அவர் ஆட்சேபித்தார். காங்கிரஸ்காரர்களோடு கூட்டாகத் தான் எதுவுஞ் செய்தால் அவர்கள் தன் கழுத்தை

அறுத்து விடுவார்கள் என்று சொன்னூர். அப்போது முத்து ராமலிங்கத் தேவருக்கும், இம்மானுவேலுவுக்கும், காரசார மான வாக்கு வாதம் நடந்தது.

ஒரே வாசகமுள்ள தனித்தனி அறிக்கையில் தனித்தனி யாய்க் கையெழுத்திடலாம் என்று கலெக்டர் கூறினூர். அதற்கும் தேவர் ஆட்சேபித்தார். ஆனுல் "கையெழுத்திடு கிறீரா? இல்லையா?" என்று கலெக்டர் கடுமையாய்க் கேட்ட தன்பேரில் தேவர் கையெழுத்திட்டார். இம்மானுவேலும் கையெழுத்திட்டார்.

கையெழுத்திட்ட மை காய்வதற்குள்ளே, மறுநாள் 11-ந் தேதி இரவு சுமார் ஒன்பதரை மணிக்கு பரமக்குடியில் பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்தில் இம்மானுவேல் படுகொலை செய்யப்பட்டார்.

பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவரும் மற்றும் 11 பேர்களும், இம்மானுவேல் என்ற காங்கிரஸ் ஹரிஜனைக் கொலைசெய்யச் சதி செய்தார்கள் என்றும், அதன்படி 2 முதல் 12 வரை உள்ள எதிரிகள் 11-9-57-ந் தேதி இரவு 9-30 மணிக்குப் பரமக்குடி ஆர்ச்சுக்கருகில் இம்மானு வேலைக் கொலை செய்தார்கள் என்றும் இ. பி. கோ, 302, 34, 109, 120 (பி) ஆகிய பிரிவுகளின்படி அவர்கள் மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. ஆகையால் அதைப் பற்றி நான் எதுவும் எழுதமுடியாது. "தருமத்தின் வாழ் வதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்" என்று சொல்லிக் கொண்டு, "கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்" என்று நம்பிக்கொண்டு மேலே கதை தொடருகிறேன்.

இம்மானுவேல் கொலை, ஹரிஜனங்களுக்கு மற்றும் ஒரு பெரும் அதிர்ச்சியை யுண்டாக்கியது. காடமங்குளத்திற் சில ஹரிஜனங்களைக் கொல்ல முயன்றூர்களே, பரமக்குடியில்

ஒரு ஹரிஜனைக் கொன்றே விட்டார்களே என்று அவர்கள் அடைந்த கவலை ஆறுவதற்குள்ளாக அருங்குளத்தில் அப்புற மொரு சம்பவம் நிகழ்ந்தது. துரதிஷ்டம் தனியாய் வராதென் பதுந் தெரிந்தது.

பரமக்குடி அருகே ஆறு ஏழு மைல் தொலையில், அருங் குளம் கிராமம் இருக்கிறது. அதில் மறவர்களும் பள்ளர் களும் குடியிருக்கிறார்கள். அவர்கள் கிராம தேவதை கும் பிட்டார்கள். கூத்து ஒன்றும் நடத்தினார்கள். மதுரை நடி கர்கள் வந்து அந்தக் கூத்தை நடத்தினார்கள்-அரிச்சந்திர நாடகம். அதில் முத்துராமலிங்கத் தேவரைப் புகழ்ந்து பாடச் சொல்லிச் சிலர் கூச்சலிட்டுக் கேட்டார்கள். கூடா தென்று சிலர் ஆத்திரத்தோடு ஆட்சேபித்தார்கள். கூச்சலும் ஆட்சேபனையுமே குழப்பத்தை யுண்டாக்கியது. நேற்றிரவு தானே இம்மானுவேல் என்னும் ஹரிஜனத் தலைவர் கொல் லப்பட்டார்,? அதற்குக் காரணமானவர் என்று கருதப்படும் முத்துராமலிங்கத் தேவரையே புகழ்ந்து பாடச் சொன்னால் ஹரிஜனங்களுக்கு எப்படி இருக்கும்? வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்தியதுபோ லிராதா? "எப்படிப் பாட லாம்?" என்று ஒரு கேள்வி; "ஏன் பாடப்படாது?" என்று ஒரு எதிர்க்கேள்வி.

இவை இரண்டுக்கும் ஒரு மோதுதல் - மறுதினம் 13உ பகலில் அருங்குளத்தில் நடந்தது. இருதரப்பிலும் உள்ளூர் ஆட்களும், அயலூர் ஆட்களும் இருந்திருக்கிறார்கள். மெனக்கிட்டுக் கலகத்திற் கென்றே அவர்கள் வந்திருக்கிறார் கள். ஆசையோடு ஆரம்பித்த கூத்து, கொலை வெறியில் கூத்தாடி விட்டது, ஒரு பெண் உள்பட ஐந்து ஹரிஜனங் கள் அதில் மாண்டனர். வீடுகளில் தீவைத்து எரிந்த தீயில் பிரேதங்களைத் தூக்கி யெறிந்தார்கள். துணிந்து ஹரிஜனங் களுந் தேவர்களைத்தாக்கினர். இந்த எதிர்த்தாக்குதலில்மூன்று தேவர்கள் இறந்தனர். காயமடைந்த ஹரிஜனங்கள் ஒன்பது பேர்; தேவர்கள் இருவர். அந்த இருவர்களும் ஆஸ்பத்திரி

யில் இறந்துபோனார்கள். ஆகவே அருங்குளத்தில் ஐந்து மறவர்களும், ஐந்து பள்ளர்களும் இறந்தனர். 107 வீடுகள் எரிந்தன - ஹரிஜனங்கள் வீடு 24, தேவர்கள் வீடு 83,

இம்மானுவேலைக் கொலை செய்தவர்கள் கீழத்தூவலில் இருப்பதாகப் போலீஸுக்கு 14-ந் தேதி காலையில் தகவல் கிடைத்தது. தூரந்தொலையில் தலைமறைவாய்ப் போய்விடு முன்பே அவர்களைக் கைது செய்ய இன்ஸ்பெக்டர் ரே ஆயுதப் படையுடன் அங்கு விரைந்து சென்றார். சுமார் முன்னூறுக்கு மேற்பட்ட தேவர்கள், வேல்கம்பு, அரிவாள். சகிதம் போலீசாரைத் தாக்கினார்கள். போலீஸ்காரர்கள் தற்காப்புக்காக ஆறுமுறை சுட்டார்கள். அதில் ஐந்து மறவர்கள் செத்தார்கள்.

தூவல் துப்பாக்கிப் பிரயோக சம்மந்தமாய்ப் பல கதைகள் கட்டப்பட்டன. ஆனால் அவைகளில் ஒன்றாவது பொருத்தமா யில்லை. இப்படி இட்டுக் கட்டப்படும் என்று தெரிந்தே சென்னை சர்க்கார் ஸ்ரீ. எஸ். வெங்கடேஸ்வரன் என்னும் ஒரு ஐ. சி. எஸ். ஆபீஸரை நியமித்து அதை விசாரிக்கச் செய்தது. அதிற் பல உண்மைகள் வெளிப்பட்டன. கட்டிவைத்துச் சுட்டது மெய்யா பொய்யா என்பதற்குக் காயங்களே வாய்திறந்து சாட்சி சொல்லுகின்றன. அதாவது கட்டிவைத்து, எதிரேயிருந்து சுட்டியிருந்தால், தோட்டாக்கள் நெஞ்சில் பாய்ந்து முதுகில் போயிருக்கும். முதுகில் புகுந்து நெஞ்சில் போயிருக்காது. இருவருக்கு காயம் முதுகிலிருக்கிறது; ஒருவருக்கு விலாவிலே காயம். ஆகவே கட்டிவைத்துச் சுட்டார்கள் என்று ஒரேவிதமாய்ச் சாட்சிகள் சொன்னாலும் காயங்கள் அப்படிச் சொல்லவில்லை. காயங்களைவிடக் கண்கூடான வேறு சாக்ஷி எதுவும் இல்லை.

எங்கப்பன் குதிருக்குள்ளில்லை என்று இன்னொரு சாட்சி சொல்லுகிறது. அது வாக்குமூலமல்ல; தஸ்தாவேஜு. ஒன்றுக்கொன்று முரணான இரண்டு தந்திகள். ஒன்று

அன்று மாலை 3-15 மணிக்கு முதுகுளத்தூரிலிருந்து கொடுக்கப்பட்டது. மற்றென்று இரவு 7-20 மணிக்கு அபிராமத்திலிருந்து கொடுக்கப்பட்டது. முதல் தந்தியில் கீழத்தூவலில் போலீசார் சுட்டார்கள், ஐந்து பேர்களுக்குமேற் செத்தார்கள் என்று மட்டுமே சொல்லப் பட்டிருக்கிறது. இரண்டாவது தந்தியில் கீழத்தூவலில் போலீஸார் ஐந்து பேரைக் கட்டிவைத்துச் சுட்டுக் கொன்றூர்கள் என்றிருக்கிறது. இவை இரண்டிற்கும் ஊடே மாலை 4-மணிக்குப் பிரேத விசாரணை நடந்தது. அப்போது யாரும் அவர்களைக் கட்டி வைத்துச் சுட்டதாகச் சொல்லவில்லை, செய்கை நடந்த உடனே 8 மைல் தொலையிலுள்ள முதுகுளத்தூருக்குத் தெரிந்த தகவல், செய்கை நடந்த 8 மணி நேரத்திற்குப் பிறகு 15 மைல் தூரத்திலுள்ள அபிராமத்திற்கு எப்படி இப்படி மாறிற்றென்று தெரியவில்லை. கதை கட்டியவர்கள் அதை இரவில் கட்டியிருக்கிறூர்கள். பகலில் நினைத்து இரவில் செய்யும் களவு இது. இரவிலே மயங்கிப் பகலிலே தெளிவது உலகியல். ஆனுல் பகலிலே பரியாயிருந்து இரவிலே நரியாக மாறுவது தேவ இயலோ என்று தோன்றுகின்றது.

தூவல் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த அதே நாள் அன்று பரமக்குடிக்குப் பக்கமாயுள்ள வெங்கடங்குறிச்சியில் அணிகுருந்தன் தவசித்தேவர் என்பவரை, ஐந்தாறு ஹரிஜன இளவட்டங்கள் சுற்றி வளைத்துக்கொண்டு பிடிக்கப் போனுர்கள், வேல்சாமித் தேவர் குறுக்கிட்டுத் தவசித் தேவரை மீட்க முயன்றூர். அப்போது அவருக்கு அநேக வெட்டுக் காயங்களேற்பட்டன. அணிகுருந்தன் தவசித் தேவர் என்பவர் இம்மானுவேல் கொலை வழக்கில் நாலாவது எதிரி.

15-ந் தேதி ஊரக்குடியில் வேறொரு சம்பவம் நடந்தது. தேவர்-ஹரிஜன் கைகலப்பு. இரண்டு பேர்களுக்குக் காயம். போலிஸ் விரைந்து போய் அமைதி ஏற்படுத்தியது.

16-ந் தேதி இலஞ்செம்பூர் அருகிலிருந்த ஒரு தேவர் வீட்டில் திடீரென ஹரிஜனங்கள் புகுந்து உள்ளிருந்த நாலு பேரைக் கொன்று தீயில் போட்டார்கள். அப்புறம் அதே கூட்டம் ஊருக்குள் புகுந்து தீ வைத்தது, தேவர்கள் துப்பாக்கியால் சுட்டனர். ஆறுபேர் இறந்தனர். பதினைந்துபேர்களுக்குப் பலத்த காயம்.

17-ந் தேதி பேரையூருக்கு மேற்கேயிருக்கும் ஹரிஜனக் குடியிருப்புகளான சேந்தகோட்டை, இருளான்டிபட்டி ஆகிய ஊர்களில் தேவர்கள் தீ வைத்து 60 வீடுகளை எரித்தனர். ஒரு பெண் உள்பட 3 ஹரிஜனங்கள் கொல்லப்பட்டனர். மற்றொரு பெண்ணுக்கு பலத்த காயம். தானிய தவசங்களும் பாத்திர பண்டங்களும், நகை நட்டுகளும் ரெம்பச் சேதம்.

அன்றே கீரந்தை கிராமத்தைத் தாக்கப் போய்க்கொண்டிருந்த சுமார் 700 ஹரிஜனங்களைச், சுற்றி வளைத்துப் போலீஸார், 120 பேர்களைக் கைது செய்தார்கள். 114 அரிவாள் வேல்கம்புகளையும் கைப்பற்றினார்கள்.

18-ந் தேதி வீரம்பல் கிராமத்தை இலஞ்செம்பூர் தேவர்கள் பழி தீர்த்துக்கொண்டார்கள், கிறிஸ்தவக் கோயிலில் அடைக்கலம் புகுந்து அடைத்துக்கொண்டு உள்ளிருந்த ஹரிஜனங்களைத் தேவமார்கள் திடீரெனத் தாக்கித் துப்பாக்கியாற் சுட்டார்கள். அதிற் சிலர் செத்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பலர் இறந்திருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது.

19-ந் தேதி கீரந்தையில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று நடந்தது. சுமார் ஆயிரம் மறவர்கள் அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து வந்து ஹரிஜனக் கிராமங்களை அடிப்பதற்காக அங்குக் கூடியிருந்தனர். ரோந்து சென்ற

போலீஸ் படை அதைப் பார்த்து விட்டது. ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுக் கலைந்து போகும்படி எச்சரித்தும் கேட்காமல் அவர்கள் போலீசாரைத் தாக்கினார்கள். போலீஸ் படை இரு முறை சுட்டது. 3 பேர் உயிரிழந்தனர்; 2 பேர் காயமடைந்தனர், 82 பேர் கைது செய்யப்பட்டனர், ஏராள மான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இக்கோஷ்டியார் மஞ்சள் தண்ணீரில் நனைத்த உடை யணிந்திருந்தனர். அது தங்களைத் தங்கள் கட்சியார் அடை யாளங் தெரிந்துகொள்வதற்காகவும், செய் அல்லது செத்து மடி என்னும் உறுதிப்பாட்டை உணர்த்துவதற்காகவுமே உபயோகப்படுத்தப்பட்டதாய்க் கூறப்படுகிறது. மங்கள மான மஞ்சள் குறி, இரத்த வேட்கைகொண்ட கொலை வெறிக் குறியாக எப்படி எப்போது மாறியதென்பது தெரிய வில்லை. இரத்த வெறியான அறிகுறி சரியானால், இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் என்று பெயர் மாறிவரும் காங் கிரஸ் சீர்திருத்தக் குழு, தன் கொடியை முக்கால்வாசி மஞ்சள் துணியில் மறைத்திருப்பதும் பொருத்தமானதே.

பரமக்குடி, முதுகுளத்தூர் தாலுகாக்களில் பரவிய கல கம் சிவகங்கைத் தாலுகாவையும் விடவில்லை-ஒட்டுவா ரொட்டி போல். பழையனூரில் ஆரம்பித்துப் பரந்த அளவில் தீ வைப்பும் கொள்ளையடிப்பும் ஜில்லா எல்லைவரை நடந்தது. ஆனால் போலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஏற்பட்டதைத் தவிர வேறு உயிர்ச்சேதமோ கலகமோ ஏற்படவில்லை. இவைகள் உணர்ச்சிவசப்பட்ட ஒரு கூட்டத்தாரால் ஏற் பட்டவைகளல்ல-திருட்டுப் புத்தியால் செய்யப்பட்டவை களே.

அருப்புக்கோட்டை தாலுகாவிலும் அப்பேர்ப்பட்ட சம்பவங்களே நடந்தன-கொலை பலியில்லை யென்றாலும்.

கொள்ளையடித்தலும் கொள்ளி வைத்தலும் கூடுதலாகவே நடந்தன,

உயிர்ச்சேதம் எவ்வளவு, பொருட்சேதம் எவ்வளவு என்று கணக்குப் பார்ப்பதில் பயனில்லை. நேரிற் பார்த்ததை விட நினைத்துப் பார்த்தபோதுதான் நாம் எவ்வளவு பெரிய பிழை செய்து விட்டோம் என்று தெரியும். மறதி மனிதனுக்குக் கடவுள் கொடுத்த மிகப் பெரிய வரம். நடந்ததை மறந்துவிட்டு நடக்க வேண்டியதை நினைந்துபார்க்க வேண்டும், கூடிவாழ்ந்தால் குறை வொன்றும் வராது. பகைத்து யாரும் வாழ்ந்ததுமில்லை; நேசித்து யாருங் கெட்டதுமில்லை.

இடமில்லை - ரைட்!

வைத்தியர் பாதம் பட்டால் மட்டும் நோய் தீராது. கை படவும் வேண்டும், கைராசியுமிருக்க வேண்டும். பெரியவர்கள் பார்த்தாலே பாவமெல்லாம் போய்விடு மென்பது பழங் கதை-கலைக்கோட்டு முனிவர் கால்பட்ட இடமெல்லாம் மழை பெய்த காலம் போய். படை படையாய் மேகம் வந்தாலும், சல்லடையில் தண்ணீரைச் சலித்ததுபோலக் கூடத் தூராமலே போய்விடுகிறது.

முதுகுளத்தூர் வியாதி, நீண்ட நாளத்தது. நீங்க நல்ல வைத்தியஞ் செய்யவேண்டும். "சுகமுறுவாய்!" என்று சொன்னால் மட்டும் போதாது. வந்து பார்த்துவிட்டுப் போனால் மட்டும் தீராது. ஆனமட்டுஞ் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும்.

கலவரம் தொடங்கியதும், கலங்காத தலைவரில்லை. சிலர் ஜாதிகளைக் குறை கூறினார்கள்; சிலர் அரசியல் வாதிகள்

மேற் பழி சுமத்தினார்கள். மறவர்–பள்ளர் நேரடிச் சண்டையல்ல இது. ஒரு ஜாதியார் இன்னொரு ஜாதியாரைத் தூண்டிவிட்டு, மாம்பழமுஞ் சோறும் போட்டு மறவர் மீது மூட்டி விட்ட சண்டை என்பது ஒரு தரப்பு வாதம். தேர்தலில் தோற்ற கட்சி ஜெயித்த கட்சியின்மீது பழி தீர்க்கிறது என்பதும் அதே தரப்பு வாதமே. ஆனால் அதை எதிர்க்குங் கட்சியோ முத்துராமலிங்கத் தேவர்மீது முழுக்குற்றத்தையும் சுமத்துகிறது. எலக்ஷனில் எப்போதும் ஜெயித்துக் கொண்டேயிருக்கவேண்டும் என்பதற்காக அவர் தன் ஜாதியை, பெண்ஜாதியைப் போல் குற்றேவல் செய்ய வைக்கிறார் என்பது காலமெல்லாந் தெரிந்த விஷயம். அடித்தாலும் பிடித்தாலும், கெடுத்தாலும் கொடுத்தாலும் மனைவிக்குக் கணவனிடம் அசைக்க முடியாத பக்தி ஏற்படுவது போலத் தேவர்களுக்கு முத்துராமலிங்கத் தேவர்மீது தவிர்க்க முடியாத பக்தி யேற்பட்டிருக்கிறது; அது தலைவனிடம் தொண்டனுக்குள்ள பக்தியல்ல-துர்க்க தேவதைக்குப் பயந்து மனிதர் படைக்கும் நைவேத்தியம் போன்றது. ஹிட்லரும் டோஜோவும் நடத்திய அந்த யுத்தத்தை, சர்ச்சிலும், ஸ்டாலினும் எதிர்த்ததுபோல் ஹரிஜனங்கள் தேவமார்களை எதிர்த்து நின்றார்கள். இடிபாடுகள் ரொம்ப; படுகொலைகளும் அதிகமே. போலிஸினால் நாசமும் ஏற்பட்டிருக்கிறது. எப்படியோ அமைதி ஏற்பட்டிருக்கிறது, நிரந்தரமான அமைதி என்று துணிந்து சொல்லமுடியவில்லை, போலிஸை வாபஸ் வாங்குவதுகூடப் புத்திசாலித்தனமல்ல. துப்பாக்கியின் சத்தங் கேட்டதும் கலகக்காரர்கள் அடங்கியிருப்பது சாட்டையின் சத்தங் கேட்டதும் சர்க்கஸ் சிங்கம் பேசாமல் கூட்டுக்குள் போவது போலிருக்கிறது. சாட்டையைக் கீழே போட்டால் தெரியும் தம்பி பாடு! அரசியல் விவகாரத்திலே ஒருவன் மற்றவன் மீது பழி சுமத்தப்பார்க்கும் கோணல் புத்தி போய், ஒவ்வொருவனும் தன் மீதே குற்றத்தைப் போட்டுக்கொள்ளும் நேரான புத்தி தோன்ற வேண்டும்.

ஜனாதிபதி பிரசாத்: சும்மா சண்டை பிடித்துக் கொண்டால் ஒன்றும் ஆகாது. சமாதானமான வழிகளினாலேயே சகலத்தையும் சாதிக்கலாம். அமைதியாக அனைவரையும் அந்த வழியில் வேண்டியதை அடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமர் நேரு: இராமநாதபுரம் ஜில்லாவில் நடக்கும் இது ஜாதிச் சண்டையல்ல; காட்டுமிராண்டித்தனம், புராதனமான அநாகரிகத்திற்குப் போய்க்கொண்டிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. தனிப்பட்டவர்கள் செய்யும் முட்டாள்தனத்திற்கு நான் கவலைப்படவில்லை. அறிவாளிகள் அதை ஆமோதிப்பதற்காக அதிகம் வருந்துகிறேன். மனிதர் ஒருவரை யொருவர் குத்தி வெட்டி கொலை செய்வதை யாரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

உள் நாட்டு மந்திரி கோவிந்த பந்த்: நாட்பட்டபுண் நாற்றமெடுத்து விட்டது. புழுக்களை நசுக்க வேண்டும். இல்லையானால் நாசம் வந்துவிடும்.

முதன் மந்திரி காமராஜ்: இருபது வருஷங்களாயிருந்து வருவதை இரண்டு நாட்களில் தீர்க்கமுடியுமா?

நிதி மந்திரி சி. சுப்பிரமணியம்: இவ்வளவு பெரும் அளவு கலவரம் நடப்பதைக்காண வருத்தமா யிருக்கிறது. அதுவும் ஜாதிக் கலகமாயிருப்பது மிக மிக வேதனையாயிருக்கிறது. காலப் போக்கை உணராத மக்களின் அறியாமையின் விளைவே இக் கலகம். நிலப்பிரபுக்களின் ஆட்சிமுறைக் காலத்தில் அவர்கள் இன்னும் இருப்பதாக நினைக்கிறார்கள்.

போலீஸ் மந்திரி பக்தவத்சலம்: இராமநாதபுரம் கலவரமானது அரசியல், வகுப்புவாதம், நிர்ப்பந்தம் ஆகிய மூன்றையுஞ் சேர்த்துப்பிடித்த ராட்சஸப் பிண்டம். நாட்டைக் காக்க வீரம் அவசியமானது. ஆனால் அந்த வீரம், கட்டபொம்மன் காட்டிய வீரமாயிருக்க வேண்டும். கலகத்துக்கும் வெறுப்புக்கும் அது காரணமா யிருக்கக்கூடாது.

பெரியார் ஈ. வெ. ரா: முதுகுளத்தூரில் நடக்கும் ஜாதிச் சண்டையை நிறுத்த நான் என் கருப்புச் சட்டைப் படையை யனுப்ப மாட்டேன். அங்கே போய்ச் சும்மா சாகவா? அல்லது தமிழனைத் தமிழன் சாகடிக்கவா ? ஜாதிகள் ஒழிந்தாலொழியச் சண்டைகள் தீராது.

ஆச்சார்யா விநோபா பாவே: கிராமக் குடியரசு ஏற்படுத்த லாம். ஆனால் அது நீடிக்குமா அல்லது நீடிக்கச்செய்ய முடி யுமா என்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில் இராமநாத புரம் நிகழ்சிகள் என் நிஷ்டையைக் கலைத்து விட்டன.

பொறுப்பிலுள்ளவர்கள் இப்படி எண்ணிய போது எதிர்க்கட்சியி லிருப்பவர்கள் இக்கலகத்தை அரசாங் கத்திற்கு எதிர்ப்பாய்ப் பயன்படுத்த நினைத்தார்கள். அழிந்த கண்மாயில் பருந்துகள் வட்டமிடுவது போல் அவர்கள் வளைய வளைய வந்தார்கள். முதலில் ஒரு கோஷ்டி சென்னை யிலிருந்து வந்தது. அதில் சேதுபதி யொருவர். மற்றவர்கள் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணி, கம்யூனிஸ் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி, சீகு ஒருவர் சா. கணேசன். சேதுபதிக்கு முதுகுளத்தூர் கலகத்தில் சிரத் தையுண்டு என்பது சரி. அவர் அந்தப் பிரதேசத்து ஜமீன் தாராயிருந்தார். இப்போ தடித்துக்கொண்டு சாகிறவர்கள் அவருடைய குடிகளாயிருந்தார்கள். மேலும் மறவர் ஜாதி யைச் சேர்ந்தவர். நமது மாஜி குடிகள், நமது ஜாதியார் இப்படிச் சீரழிந்துபோகிறார்களே என்னும் கவலை இராம நாதபுரம் ராஜாவுக்கு இராதிருக்காது. ஆனால் இவர் அவர் களோடு எப்படிச் சேர்ந்தார், அல்லது அவர்கள் இவ ரோடு எப்படிச் சேர்ந்தார்கள் என்பது விந்தையாயிருக்கிறது. எப்படியாயினும் அவர்களில் இராஜாவும், ம. பொ. சியும் மதுரையோடு திரும்பிவிட்டார்கள், ராமமூர்த்தியும், கணே சனும் பரமக்குடிவரை போய் வந்தார்கள் அவ்வளவோடு அவர்கள் முயற்சி முடிந்தது. அது நல்ல வேளையாய்ப் போய்

விட்டது. மூனேமுக்கால் நாழிகையில், எல்லேயில் மிதித்தும் மிதிக்காமலும் அவர்கள் என்ன கண்டார்கள் என்பது விந்தையிலும் விந்தையாயிருக்கிறது. அதாவது முதல் மந்திரியும் முத்துராமலிங்கத் தேவரும் முதுகுளத்தூர் பகுதியில் தோள் மேல் தோள் போட்டுக்கொண்டு சுற்றி வந்தால் கலகத்தை நிறுத்தலாம், என்று கண்டு சொன்னுர்கள், இந்த உண்மையை இவ்வளவு உழைத்துக் கண்டுபிடித்ததற்காக இவர்களுக்கு இவ்வருஷ நோபல் பரிசு வழங்கலாமே என்று தோன்றுகின்றது. புலியையும் பசுவையும் ஒரே துறையில் தண்ணீர்குடிக்க வைக்க சர்க்கஸிலே மட்டுந்தான் முடியும் என்பதில்லே, அரசியலிலும் அப்படிச்செய்ய முடியுமென்ருல் அது ஒரு அற்புதமான சாதனேயா யிருக்குமல்லவா.?

இல்லாத கொடுமைகளேச் செய்த கலகக்காரர்களேப் பொல்லாத அடக்குமுறையால் அடக்கியது சரியன்று என்றும் அச்சமாதான தூதர்கள் சொன்னுர்கள், முள்ளே முள்ளினுலே தான் எடுக்க முடியும் என்னும் எளிய விஷயங் கூட இவர்களுக்குத் தெரியாமற் போய்விட்டதே? விஷத்தையும் அமுதையும் ஒரு கிண்ணத்தில் வைத்தால், மனிதன் குடிக்கமுடியுமா? போலீஸை வாபஸ் வாங்கிக்கொண்டு கலகக்காரர்களிடம் யாராவது போய் "ஐயா! சாமி!" என்று கும்பிட்டுக் கேட்டால் அவர்கள் சும்மா இருப்பார்களா? "போமையா' போம்! புத்தியில்லாதவர்!" என்று நமக்குப் புத்தி போதிக்க வரமாட்டார்களா? "தின்னவரும்புலி தன்னேயும் அன்போடு சிந்தையிற் போற்றிட" நாமெல்லாம் மகாத்மாக்களல்ல- மனிதர்கள். நம்மால் அது முடியாது.

நமது நிதி மந்திரி கனம் சி. சுப்பிரமணியமும், போலீஸ் மந்திரி கனம் எம், பக்தவத்சலமும் கலகப்பகுதி பூராவும் இரண்டு நாள் சுற்றுப்பிரயாணஞ் செய்து, நிலேமையை நேரிற் கண்டறிந்தார்கள். கட்டுக்கடங்கியுள்ள கலகம்,

காரணம், உயிரழிவு, இடிபாடு, சேதம் எல்லாம் தெரிந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கான முதல் உதவி உடனடியாய்ச் செய்யுமாறு உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இந்திய சர்க்காரின் உதவி உள் நாட்டு மந்திரி கனம் பி. என். தத்தார் வந்தார். அவரோடு காங்கிரஸ் தலைவர்களும், சர்வகட்சித் தலைவர்களும் வந்தார்கள். அரசியல் கலகமே நடந்தது என்பதற்கான ஆதாரங்கள் எவ்வளவு காட்ட முடியுமோ அவ்வளவையும் சர்வ கட்சித்தலைவர்கள் காட்டினார்கள். போலிஸ்காரர்கள் பண்ணியதெல்லாம் பூரா பூரா அக்கிரமம்-மனிதர் செய்யக்கூடியதல்ல - அரக்கர் செய்யக்கூடிய தத்தனையுஞ் செய்தனர் என்று சொல்லிக் காட்டினார்கள். "கிரந்தையில் போலிஸ்காரர்கள் மறவர்களைச் சுட்டு நெருப்பில் போட்டார்கள்" என்று கூறி கே. டி. கே. தங்கமணி என்ற கம்யூனிஸ்ட்காரர்,வைத்தெடுத்ததுபோல் வைக்கோல் சாம்பல் குவியலிலிருந்து ஒரு எலும்பை எடுத்துக் காட்டினார். இருபது நாட்களுக்குப் பிறகு அந்த எலும்பு "இன்னுஞ் சுடுதே" என்றார். தத்தார் அதை வாங்கி விரலால் சுண்டிப் பார்த்துவிட்டு "நம்ப முடியவில்லையே" என்றார். பொய் சொல்ல வேண்டாமென்று நான் சொல்லவில்லை. சொல்லலாம்; ஆனால் பொருத்தமாய்ச் சொல்ல வேண்டும். இருபது நாட்களுக்கு முன் எரிந்த பிரேதத்தின் எலும்பு இருபது நாட்களுக்குப் பிறகுஞ் சுடுவதென்றால் எப்படி? பொய்யா?மெய்யா? அப்படியே அது அத்தனைநாள் வரை நெருப்பில் கிடந்தது என்றால் அது வெந்து நீந்துபோயிருக்க வேண்டும். கையால் தட்டினால் தூள் தூளாய் உதிர்ந்துவிடும்.

மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட ஓரிடத்தில் தத்தாரிடத்தில் "போலிஸ் படையை வாபஸ் வாங்கினால் ஹரிஜனங்கள் எங்களை அழித்து விடுவார்கள்" என்று மறவர்

கள் மிக உருக்கமாய் உரைத்தார்கள். அதற்கு தத்தார் "ராமன் இருக்கிருன் உங்களைக் காக்க" என்று பதிற் சொன்னுர். இதன் அர்த்தம் என்ன? என்ன கருத்தில் இப் படிச்சொன்னுர்?

சேதுவை மேடுறுத்தி, வீதி சமைத்து, சிங்களத்திவினுக் கோர் பாலமமைத்து, எழுபது வெள்ளஞ் சேனையை இட்டுச் சென்று, இராட்சஸ வேந்தனுன இராவணனைக் கொன்று, சீதையைச் சிறை மீட்டித்திரும்பிய ஸ்ரீ ராமன், சேதுவைக் காவல்புரிய மறவர் தலைவனை நியமித்தான் என்று புராணம் இருக்கிறதல்லதா அதை நினைத்தே அவர் அப்படிச் சொன் ஞர். கேட்கும்போதெல்லாம் வரங்கொடுக்கக் கடவுள் ஓடோடி வராவிட்டாலும் அவசியம் என்று ஏற்படும்போ தாவது அரசாங்கம் ஓடிவருகிறது என்பது தெரிகிறது. முன்னே பேய் மழையும் பெருவெள்ளமும் வந்து நம்மைச் சிம்பு சிம்பாய் பிய்த்தெரிந்தபோது அரசாங்கம் ஓடோடி வந்து எவ்வளவு உதவியது? இப்போதும் எவ்வளவு உதவு கிறது?

தத்தார் சொன்ன விஷயத்தில், இன்னெரு உண்மையு மிருக்கிறது. அதாவது மறவர்கள் இன்னும் பழைய ஆதிக் கத்தையே மனதில் நினைத்துக்கொண்டு மற்றவர்களை ஆளப் பிறந்தவர்களாகக் கருதுகிருர்கள் என்பதும், மட்டுக்கு மிஞ் சிய இம்மமதை மாறவேண்டும் என்பதும் அதில் அடங்கி யிருக்கிறது.

மற்ருெரு விஷயமும் அவர் சொன்னுர். அதாவது மற வர் தலைமை மாறவேண்டும். இதனுல் முத்துராமலிங்கத் தேவர் தலைமையினுலேதான் மறவர் கெட்டு முட்டைச் சாம்பலானுர்கள் என்று அவர் சொல்லாமற் சொல்லுகிருர். இதையும் நாம் சிந்திக்க வேண்டும். இதுவரை இந்தத் தேவர்

நம் சமூகம் முன்னேறுவதற்கான உபாயங்கள் என்னென்ன எல்லாம் செய்தார், என்னென்ன செய்யவில்லை என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். உருப்படியாய் ஒன்றுமே செய்யவில்லை யென்றால் வேறு ஒரு தலைவரை தேடிப்பிடிக்க வேண்டும். தலைவரென்றால் வல்லவராக மட்டும் இருந்தால் போதாது நல்லவராகவு மிருக்கவேண்டும். நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் உபயோகம் உண்டு.

இதில் இன்னொரு விஷமமான விஷயமும் இருக்கிறது. பத்திரிகைகளும் இதைப் பணயம் வைத்தாடிவிட்டன. அரசாங்கத்தினிடம் அவைகளுக்கிருந்த ஆத்திரத்தை இதில் வைத்துத் தீர்த்துக்கொண்டன. அடக்கு முறையை அரசாங்கம் ஆரம்பிக்குமுன் அப்படிச் செய்திருந்தால் இப்படிச் செய்திருந்தால் அதைத் தவிர்த்திருக்கலாம் இதைத் தவிர்த்திருக்கலாம் என்று எழுதின. ஆரம்பித்தபின் அப்படிச் செய்தது தப்பு இப்படிச் செய்தது தப்பு என்று எழுதின. ஜல்லிக்கட்டுக் காளைக்குக் கொம்பு சீவி எண்ணெய் தடவி விடுவதுபோலக், கலகக்காரர்களை உற்சாகப்படுத்திப் பத்திரிகைகள் செய்திகளும் அபிப்பிராயமும் வெளியிட்டன. சர்வ கட்சிகளும் சகல பத்திரிகைகளும் இத்தர்ம கைங்கர்யத்தையே செய்தன. திராவிடக் கழகத்தின் தினத்தாளான விடுதலை குழப்பக்காரர்களின் விஷமப் பிரசாரம் என்பதாகச் சில பத்திகள் எழுதியிருக்கிறது. பத்தியம் பார்க்காமலே எழுதியிருக்கிறது. அதை யெழுதும்போது முத்துராமலிங்கத் தேவரை அரசாங்கம் கைது செய்திருந்தது. தேவரைக் கைது செய்தது தவறு, அதனால் சமாதானம் என்பதே உலகில் இல்லாமல் ஒழிந்துவிடும் என்று அந்தச் சமாதான தூதர்களும் சநாதனப் பத்திரிகைகளும் கூறின. மத்தியஸ்தரான பெரியாரே மனங்குமுறி எழுதுகிறார்;

"உயர் திருவாளர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை ஆட்சியாளர் கைது செய்தது பற்றி ஒருசில கும்பல்கள் முதலைக்

கண்ணீர் வடிக்கத்தொடங்கியிருக்கின்றன. பார்ப்பன ஏடுகளான "தினமணி," "கல்கி," போன்றவைகள் அவரை விடுதலே செய்ய வேண்டுமென்று கசிந்துருகிக் கண்ணீர் மல்கி எழுதுகின்றன. கலவரப் பிரச்னேயோடு சம்மந்தமில்லாத பல் வேறு சங்கதி களேக் கலந்து, முதலமைச்சர்மீது தவருன எண்ணங்களேக் கற் பித்து விஷமத்தனமாக எழுதியிருக்கின்றன.

"சமாதானக்குழு என்ற பெயரினுல் புறப்பட்டிருக்கிற எதிர்க் கட்சிக்காரர்களின் கலவரக்கும்பலும்" "கோவிந்தா! கோவிந்தா!" என்று இம்மாதத்தில் சனிக்கிழமைக் காலேயில் சிறுவர்கள் வீடு தோறும் சென்று கத்துவதுபோலக் கத்திக் கொண்டிருக் கிறது.

"திரு. தேவர் அவர்களுக்குக் கட்சியுமில்லே; கொள்கையு மில்லே. "சுபாஷ் போஸ் உயிரோடிருக்கிருர்" என்பது மட்டும் ஒருகட்சிக்குக் கொள்கையாகிவிடுமா? தேவர் தம் சிறந்த பேச்சுச் சக்தியைப் பயன்படுத்தி, தம் ஜாதிக்காரர்களின் தனிப்பெருந் தலேவராயிருந்துகொண்டு, அதன் மூலம் சட்ட சபை அல்லது பார்லிமெண்டில் பதவி பெறுவது என்பதே அவரது பொதுத் தொண்டாயிருந்துவருகிறது. எதிர்க்கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்று மந்திரி சபை அமைக்க முடிந்தால் அதில் தமக்கொரு மந்திரி கிடைக்குமா என்பதற்காக 2, 3, பேர்களேச் சேர்த்துக் கொண்டு தனிக்கட்சி யமைப்பவராதலால் அந்த வாய்ப்பு இல்லே யென்றவுடனேயே பார்லிமெண்ட் உறுப்பினர் பதவியை வைத் துக்கொண்டு (அதிக ஊதியம் அதில் இருப்பதால்) எம். எல். ஏ. பதவியை உதறிவிட்டார். தன்னந்தனியாய்ப் பார்லிமெண்டில் போய் இவர் என்ன சாதிக்கப்போகிருர் என்பதைப்பற்றி அவரைத்தான் கேட்கவேண்டும்.

"ஜாதிவெறியை வளர்த்து மற்ற ஜாதிகளே ஒடுக்கி வைத் துத் தான் ஒரு தனிக்காட்டு ராஜா மாதிரி இருந்து வந்தால் ஜாதி ஒழிப்புக்காரராகிய நாம் வருந்தாமலிருக்க முடியவில்லே. ஜாதிவெறி வேருன்றிவிட்டால் ஜனநாயகத்துக்கோ, பகுத்தறி வுக்கோ, பொதுநலத் தொண்டுக்கோ, ஒழுக்கத்துக்கோ, நீதிக்கோ இடமில்லே.

"தேவர் சிறைவாசத்தை நாமும் விரும்பவில்லையென்றாலும், இந்தச் சூழ்நிலையில் அவரைச் சிறைப் பிடிக்காதிருந்தால் சாதிச் சண்டை நின்றிருக்காதென்பது உறுதி. அவர் வெளியிலிருந்த வரை கலவரம் நடந்து கொண்டிருந்ததும், கைது செய்யப்பட்ட பின் கலவரம் அடியோடு ஓய்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

"இன்று அவருக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்ற சீயார் கும்பலைச் சேர்ந்தவர்களுக்கு ஒன்று நினைவூட்டுகிறோம் இதே சீயார் அவர்கள் முதலமைச்சரா யிருந்தபோதுதான் தடுப்புக் காவற் சட்டத்தின்கீழ் திரு. முத்துராமலிங்கனார் கைது செய்யப்பட்டுப் பல ஆண்டுகள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டிருந்தார், 2-வது உலகப்போரின்போது இவர் ஜாதிச்சண்டைக்குக் காரணமாயிருப்பார், போர் எதிர்ப்புப்பிரசாரஞ் செய்வார் என்ற காரணத்திற்காகச் சிறைப்படுத்தப்பட்டிருந்தரர்.

"இன்றைய நிலையிலுங்கூட முன்கூட்டியே தேவரைத் தனிப்படுத்திருந்தால் இத்தனை உயிர்கள் பலியாகியிருக்குமா? இவ்வளவு பொருட்சேதம் ஏற்பட்டிருக்குமா? இத்தனை ஆதிதிராவிடக் குடும்பங்கள் ஊரைவிட்டு வெளியேறி தவிக்குமாறு நேர்ந்திருக்குமா?

"போலீஸ் நடவடிக்கை சிறிது தாமதமானதால்தான் இவ்வளவு சேதம் ஏற்பட்டது. இன்னும் பலமாதங்களுக்குப் போலீஸ் படை கலவரப்பகுதிகளிற் காவல் புரிந்துதான் தீர வேண்டும். போலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மாண்டவர்களுக்காக முதலைக்கண்ணீர் வடிக்கின்றவர்கள், மாதா கோயிலுக்குள் புகுந்து ஏழைமக்களைச் சாதிவெறியர்கள் பதைக்கப் பதைக்கச் சுட்டுக்கொன்றும், அடித்தும், பெண்களை அவமானப் படுத்தியும் மிருகத்தனமாக நடந்துகொண்டதைக் கண்டிக்காமலும் வருந்தாமலும் இருப்பது ஏன்?

"சமாதானக் குழு என்ற புதுக்கும்பல் இனிப் புதுக்கலகத்துக்கு விதை ஊன்றுவார்களோ என்று அஞ்சவேண்டியதிருக்கிறது. இவர்கள் பேச்சும்நடத்தையும் அத்தகையதாயிருக்கிறது. ஆதலால் அவர்களைக் கலவரப்பகுதியில் நுழையவிடக்கூடா

தென்று ஆட்சியாளருக்கு எச்சரிக்கின்றோம். குழம்பியுள்ள குட்டையில மீன் பிடிக்கப் பார்க்கிறார்கள் இக்குழுவினர். இவர்களுக்கு பஸ்ஸுல்லா ரோடுப் பார்ப்பனர்தலைவர் தூபம் போடுகிறார் ''

பத்திரிகை யென்பதோர் உலகம், அதிற் பல கொள்கைகளையுடைய பல ராஜ்யங்கள் உண்டு. எல்லை தாண்டுவது எந்த ராஜ்யத்திலும் ஒரு குற்றமே. தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் முதுகுளத்தூர் விஷயத்தில் எல்லைமீறிப் போய் விட்டன என்பதை என்வரையில் வருந்தத்தக்கதாகவே கருதுகிறேன்.

ஜனநாயகத்தில் ஆளுங்கட்சியின்மீது எதிர்க்கட்சிகள் பிரயோகிக்கும் கடைசி ஆயுதம் நம்பிக்கையில்லாத தீர்மானமே. அதையும் போட்டுப் பார்த்துவிடுவதென்று, சென்னை சட்ட சபையில் சென்ற மாதம் 28-ந் தேதி, கம்யூனிஸ்ட் மெம்பர் கல்யாண சுந்தரம் பிரரேபித்தார்; பாபி மெம்பர் சசிவர்ணம் ஆமோதித்தார்.

இந்தக் கம்யூனிஸ்ட்-பாபி கூட்டுறவே இந்திய அரசியலில் ஒரு புதுச்சரக்கு. இதற்கு முன் எப்போதும், எப்பேர்ப்பட்ட விஷயத்திலும், இந்தக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்ததேயில்லை. இப்போதுந்தானென்ன? எப்போதும் பிரியா வண்ணம் இவைகள் சேர்ந்து விட்டனவா? ஏதோ கொஞ்சநேரம் குஷாலாய்க் கூடியிருந்துவிட்டுப் போலாமே என்று இந்த முதுகுளத்தூரில் இவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அப்புறம் யாரோ எவரோ?

இருநூற்றைந்து பேர் இருக்கிற ஒரு கூட்டத்தில், இரண்டேயரைக்கால் மெம்பர்கூட இல்லாத ஒரு கட்சி, நூற்றைம்பத்துமூன்று அங்கத்தினர்களுடைய ஆளுங்கட்சி மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானங் கொண்டுவருவது, வன

ராஜஜுனை சிங்கத்தின்மீது குழி முயல் பாய்வதுபோ லிருக்கிறது. முதுகுளத்தூரிலே கலவரம் நடந்துகொண்டிருந்த போது, தஞ்சாவூரில் (பார்லிமெண்டரி தொகுதியில்) கம்யூனிஸ்டுகள் தேர்தல் பிரசாரஞ் செய்துகொண்டிருந்தார்கள். முன்பெல்லாம் 'சீனுவைப்பார்! ரஷ்யாவைப்பார்!' என்று தெருவிலே, சென்ன பட்டினம்பார்! சீரங்கபட்டினம் பார்! என்று சொல்லுவானே, அப்படிச் சொன்னவர்கள் இப்போது கேரளத்தையும் முதுகுளத்தூரையும் பார் என்று சொன்னுர்கள். கேரளத்திலே அப்படிக் கம்யூனிஸ்ட் சர்க்கார் கொடிக்கட்டி ஆளுகிறது. முதுகுளத்தூரிலே இப்படிக் காங்கிரஸ் சர்க்கார் மறவர்களைச் சுட்டுத் தள்ளுகிறது என்றனர். தஞ்சாவூரிலே இதைத் தவிர வேறொன்றையும் மணலிக்கோஷ்டியார் வாயில் வைத்துப் பேசவில்லை. எதிர்க்கட்சியார் எல்லாருஞ் சேர்ந்து, முதுகுளத்தூர் கலவரத்தை ஈடுகாட்டி அந்தப்பிரச்னையின்மீதே காங்கிரசோடு போட்டியிட்டார்கள். மறவர்கள் அதிகமாயுள்ள பிரதேசமான அறந்தாங்கியில் காங்கிரஸ் அபேட்சகருக்கு அதிகமான வோட்டுகள் கிடைத்தன. அதனுல் முக்குலத்தோர்களுக்குக் காங்கிரஸிடம் நம்பிக்கை குறையவில்லை யென்று தெரிகிறதல்லவா? காங்கிரஸ் சர்க்கார், கலகங்களில் சரியாகவே நடந்தது என்பதற்கு தஞ்சாவூர் தேர்தலே சரியான சாக்ஷி. அந்த உப-தேர்தலில் காங்கிரஸ் சர்க்கார்மீது மக்களுக்குப் பரிபூரணமான நம்பிக்கையிருக்கிற தென்பது சந்தேகமில்லாமல் தெரிந்துவிட்ட பிறகு. அதிலே தோற்றுப்போன அதே கட்சியே சட்ட சபையில் வந்து, சர்க்கார் மீது நம்பிக்கையில்லையென்று கத்தியது. தேர்தலில் படித்த பாடத்தைச் சட்டசபையில் வந்து ஒப்பித்தால் பரிட்சையில் மார்க்குக் கிடைத்துவிடுமா? தோற்றுப்போகும் என்று தெரிந்தும் தோழர் கல்யாணசுந்தரம் ஏன் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தார்? ஆற்றோடு போனுலும் செட்டியார் ஆதாயத்தோடு தான் போவார். எப்போதும் அண்டர்கிரௌண்டிலே

போய்ப் பழக்கமுடைய தோழர்களுக்கு நேரான வழியிலே போகத் தெரியாது. விழுகிற வீழ்ச்சியிலே எட்டியதைத் தாவிப் பிடிப்பதுபோலவும், கன்னவாசலில் நுழைகிற திருடன் ஆள் விழித்திருக்கிறதா என்று பார்ப்பதற்குக் கரிச் சட்டியை விட்டுப்பார்ப்பதுபோலவும், கிணற்றுழம் பார்க்க ஊரார் பிள்ளையை இறக்கிவிடுவதுபோலவும் தோழர் தீர்மானங் கொண்டு வந்தார். ஆகையினுலேதான் தோற்றாலும் பரவாயில்லை யென்று தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

திராவிடக் கழகத்தார் நடத்தும் "பிராமணுள்" போர் டழிப்புப் போராட்டத்தில் 'முரளி கபே'க்கு எவ்வளவு விளம்பர பேரம் கிடைத்திருக்கிறது? வியாபாரங்கூட அதிகமாகவே நடக்கிறது. அதே மாதிரி, சட்ட சபையில் இருக்கிறது என்றுமில்லாமல், இல்லை யென்றுமில்லாமல் இருக்கிற ஒரு கட்சி எழுந்து நின்று இரண்டு மணி நேரம் பேசுவதென்றுல் கிடைக்கக்கூடிய வாய்ப்பா? மெம்பர்களும் பார்வையாளரும் எவ்வளவு பேர் அதைக் காது கொடுத்துக் கேட்கிறுர்கள்? மறுநாட் பத்திரிகைகளிற் கொட்டையெழுத்திற் பிரசுரிக்கப்படுவதை எத்தனை பேர் படிக்கிறுர்கள்? நானும் இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்வதற்கு இப்பிறவி தப்பினுல் இன்னொரு பிறவி கிடைக்குமென்பது என்னநிச்சயம்? சந்தடி சாக்கில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, விரல் விட்டு எண்ணக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சி தன்னைத்தானே வேறொருவர் செலவில் விளம்பரஞ் செய்துகொண்டது என்பதற்குமேல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு வேறு ஒரு உருப்படியான நோக்கம் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மூலம், எதிர்க்கட்சிக் காரர்கள் தங்கள் வேஷத்தைக் கலைத்துக் கொள்ளுகிறுர்கள்

அலங்கோலமாயிருந்த சொரூபம் அம்மணமாகிறது. பெரிய கலகத்தைச் சிறிய காலத்தில் கட்டுக்குட்படுத்தியதன் மூலம் போலீஸ் மந்திரி தம் திறமையைக் காண்பித்திருக்கிறார். அமைதியையுஞ் சட்டத்தையும் சீக்கிரத்தில் நிலைநாட்டி, உள்நாட்டு மந்திரி தம் ஆற்றலைக் காட்டியுள்ளார்.

காமராஜ் மந்திரி சபைமீது எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டுமல்ல காங்கிரஸ்காரர்களே அதிருப்தியடைந்ததுண்டு. நடந்த கூத்துக்களை நாள்தோறுஞ் சொன்னாலும், மானங்கெட்ட பிறர்வைதாலும், 'பார்க்கலாம், பார்க்கலாம்' என்றே சொன்ன பாவமே நம்பிக்கையில்லாத் தீர்மானமாக வந்தது. 'நாடார், கோழை, கையாலாகாதவர், என்று நாயக்கர் (ஈ. வெ. ரா.) சொன்னமாதிரி "தேவரிடமும், ஆச்சாரியாரிடமும் ஆட்சிப் பொருப்பை ஒப்படைத்துவிட்டு, ராட்டினத்தைத் தூக்கிக் கொண்டு காந்தி சமாதிக்கோ, கிண்டியிலுள்ள காந்தி நினைவு மண்டபத்திற்கோ போய் அமாவாசைக்கு அமாவாசை நூற்புயக்ஞமும் கீதாபாராயணமுஞ் செய்யலாமே" என்று சொல்லத் தோன்றியது. என்றாலும் முதன் மந்திரி தக்க தருணத்தில் மக்களைக் காப்பாற்றினார். மூண்ட தீயையும் அணைத்து, பயந்து மாண்ட மக்களையும் அணைத்து வேண்டிய உதவியையு மளித்துச் சமாதானத்தை நிலைநாட்டியதற்கு மறவர்களும், ஹரிஜனங்களும், மற்றெல்லா மக்களும் முதன் மந்திரிக்கும் அவரது மந்திரி சபைக்கும், சர்க்காருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் இலாகாவில். பீசி முதல் ஐஜிவரை எல்லாரும் எடுத்துக்கொண்ட பெரும் பிரயாசைக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உற்றார் உறவினருக்காக அறவான் ஒருவனே உயிர்ப் பலியானான் என்று உதாரணம் இருந்தாலும் ஹரிஜனங்களுக்காக உயிர் நீத்த இளவல் இம்மானுவேலுக்கும் அஞ்சலி செய்வோம்.

கலகத்தில் களப்பலியான எல்லாருக்கும் என் வணக்கம்.

ஜெய் ஹிந்த்!

Printed at S. N. Press, Mdu. '57.